பரப்பிரஹ்மணே நம:

லக்ஷணவிருத்தி

ஸ்ரீ கோவிலூர் மடம்

ஸ்ரீ சிதம்பர ஞான தேசிக ரவர்கள் இயற்றிய செய்யுளும்,

மதுரை

ஸ்ரீ பிரஹ்மாநந்த ஸ்வாமிக ளவர்கள் இயற்றிய சம்ஸ்கிருத சுலோகமும்,

திருக்களர்

ஸ்ரீ வீரசேகர ஞாந தேசிக ரவர்கள் பாதசேகரரான

ஸ்ரீ சுப்பைய ஞாந தேசிக ரவர்கள் இயற்றிய வசநமும்

அடங்கியுள்ளது.

இது

திருப்பூவண மடம்

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகளால்

பரிசோதிக்கப் பெற்று

மதுரை

ஸ்ரீ பிரஹ்மாநந்த ஸ்வாமிகள் மடாதிபதி

ஸ்ரீ அத்வைதாநந்த ஸ்வாமிக ளவர்களால்

சென்னை சச்சிதாநந்தப் பிரசிலும், ஆர்யகலா பிரசிலும்

பதிப்பிட்டது.

1923.

[விலை ரூ. 1—8—0.

பரப்பிரஹ்மணே நம:

லக்ஷண விருத்தி

ஸ்ரீ கோவிலூர் மடம்

ஸ்ரீ சிதம்பர ஞாந தேசிக ரவர்கள் இயற்றிய

செய்யுளும்,

மதுரை

ஸ்ரீ பிரஹ்மாநந்த ஸ்வாமிக ளவர்கள் இயற்றிய

சம்ஸ்கிருத சுலோகமும்,

திருக்களர்

ஸ்ரீ வீரசேகர ஞாந தேசிக ரவர்கள் பாதசேகரரான

ஸ்ரீ சுப்பைய ஞாந தேசிக ரவர்கள் இயற்றிய

வசநமும்

அடங்கியுள்ளது.

இது

திருப்பூவண மடம்

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகளால்

பரிசோதிக்கப் பெற்று

மதுரை

ஸ்ரீ பிரஹ்மாநந்த ஸ்வாமிகள் மடாதிபதி

ஸ்ரீ அத்வைதாநந்த ஸ்வாமிக ளவர்களால்

சென்னை சச்சிதாநந்தப் பிரஸிலும், ஆர்யகலா பிரஸிலும்

பதிப்பிட்டது.

1923.

[விலை ரூ. 1—8—0.

பூமிகை.

உலகத்திற் பிறந்த மனிதர்களால் அடையத்தக்கது பிரஹ்மப் பிராப்தி யொன்றே. அதற்குச் சாதநமாகப் பல நூல்கள் உள. அவற்றுள் இவ்விலக்ஷணாவிருத்தியு மொன்றும்.

இலக்ஷணா—ஆவிருத்தி—பிரஹ்மத்தின் லக்ஷணங்களை அப்பியாசம் செய்தல் எனப் பொருள்படும். கருத்தாலோ பிரஹ்ம நாமாவலி எனவாம்.

இதனை ஸ்ரீ கோவிலூர் ஸ்ரீ முத்திராமலிங்க ஞாந தேசிகர் ஆதீநம் ஸ்ரீ சிதம்பர ஞாந தேசிகரவர்கள் செந்தமிழில் 115 விருத்தப் பாசுரங்களாகச் செய்தார்கள். அதன்பின் ஸ்ரீ கோவிலூர் ஆதீநத்தைச் சார்ந்த ஸ்ரீ அஸ்வத்தேச முனிவர்களது முக்கிய அந்தேவாசியாகிய ஸ்ரீ பிரஹ்மாநந்த குரு ஸ்வாமிகளவர்கள் சம்ஸ்கிருதத்தில் அநுஷ்டுப் முதலிய சந்தங்களில் 413 சுலோகங்களாகச் செய்தார்கள். அதனைத் தமிழில் வசநமாக மொழிபெயர்க்க வேண்டுமென்று மதுரை, ஸ்ரீ பிரஹ்மாநந்த ஸ்வாமிகளின் மடாதிபதி ஸ்ரீ அத்வைதாநந்த ஸ்வாமிகள், திருக்களர் ஸ்ரீ வீரசேகர ஞாந தேசிகரவர்கள் பாதசேகரரும், நியாய சந்திர வேதாந்த பாஸ்கர மஹா மண்டலேஸ்வரரும் ஆகிய ஸ்ரீ சுப்பைய ஞாந தேசிகேந்திர சுவாமிகளவர்களைக் கேட்டுக்கொள்ள, அவ்வாறே தமிழில் வசநவடிவமாக ஆக்கினார்கள். இம்மூன்றும் திருப்பூவண மடாதிபதி ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகளால் பிழையறப் பரிசோதிக்கப் பெற்று மேற்படி ஸ்ரீ அத்வைதாநந்த ஸ்வாமிகள் அவர்களால் அச்சிடுவிக்கப்பட்டன.

ஸ்ரீ பிரஹ்மாநந்த குரு ஸ்வாமிகளவர்கள் மீது பாலாநந்த சுவாமிகள் இயற்றிய நிர்க்குண பிரஹ்ம சகஸ்ரநாமமும் அதன் சுலோகமும் இதனோடு சேர்க்கப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீ பிரஹ்மாநந்த குரு ஸ்வாமிகள் இயற்றிய நூற்களாவன.

1 பிரஹ்மாநந்த அநுசந்தாந யுக்தி ரத்நாகரம் தமிழ்
2 லக்ஷணாவிருத்தி—சுலோகம்
3 சர்வ வேதாந்த சித்தாந்த சார சங்கிரகம் தமிழ்
4 பஞ்சதசி பதயோஜனி யுரை
5 அசுவத்தநாத சரிதம் தமிழ்

இன்னும்சில உள.

பரப்பிரஹ்மணே நம:

லக்ஷண விருத்தி.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	29	அபபிரமேயன்	அப்பிரமேயன்
3	3	நிரீந்திரியன்	நிரிந்திரியன்
3	9	நிற்குணண்	நிர்க்குணன்.
	16	[illegible]	[illegible]
	24	அமேஹாபன்	அமேஹயன்.
6	5	வரைவா	வரைவார்.
	11	பாத்முட்	பாதமுட்
	15	னவைபிலொஞிபு	னவைபிலோஞிபு.
41	26	தத்துவங்களுப	தத்துவங்களும்
42	8	காலலங்	காலங்
	18	ெபஙஙனங்	யெங்ஙனங்
	22	சிங்மாத்திரக்	சிங்மாத்திரக்
	25	நீரிசுரன்	நிரீசுரன்
43	4	செரிகின்ற	செறிகின்ற
44	8	விளங்க	விளங்கு
45	2	இலேயப்படுதல்	இலயப்படுதல்
46	19	[illegible]	யான்
49	14	விதையரிங்	விதையறிங்
	23	[illegible]	[illegible]
50	22	[illegible]	[illegible]
51	28	[illegible]	[illegible]
53	6	அபாரமானது	அபாவமானது
	14	[illegible]	[illegible]
	19	எப்போதுமமருத	எப்போதும் மிருத
54	8	களுடைனய, ரிவொ	களுடைய, விரிவொ
	10	[illegible]	[illegible]
	27	பரமாச்	பரமாகச்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
55	19	அபாயத்தன்மை	அபயத்தன்மை.
56	12	யாதுபயனுவே	யானபயனுவே.
57	20	பாமான்வினை	பரமான்மாவினை
58	7	நிர்விஷயோ	நிர்விஷய:
	18	நிர்வாதிபத்தன்மை	நிர்விஷயத்தன்மை
59	9	வாராணஸ்ய	வாராண:
	24	வாராதந	வாராதந:
60	9	ஸாமாந்ய	ஸாமாந்ய:
	22	தின்மை	தன்மை
	24	யோதுவினுலும்	யேதுவினுலும்
61	3	மஹாஸாமாந்ய	மஹாஸாமாந்ய:
	10	ஞாநாஞ்ஞானேஞான	ஞாநாஞ்ஞாந
	27	நிவ்ருத்தோ	நிவ்ருத்த:
62	10	அறிவுடைமையை	அறிவுடைமைரூப,
63	1	ஸகாரம	ஸகாரம:
	28	முக்ஷச்சு	முடிச்சு
64	3	மாயைபாகிப	மாயையாகிய
	13	சுறுதி	சுருதி
	14	பிறழ்ச்சியைவடை	பிரழ்ச்சியையடை
65	12	ஸமோஹ	ஸமோஹ:
67	8	ஸக்ஷோய	ஸக்ஷோய:
69	6	ஸர்வமத	ஸர்வமத:
70	6	ஸர்வாதார	ஸர்வாதார:
	9	ஐஐாஷய:	ஸாவாஷய:
	24	நிராதார	நிராதார:
71	18	ஶ்ருதி	ஶ்ருதி:
74	7	மஹா	மஹாந்
75	2	பற்றலன	பற்றலென
	17	போலும்செங்கமாகவே	போலுமசங்கமாகவே
78	17	ஸகாரண	ஸகாரண:

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
77	2	நாமாசவுங்	நாமாகவுங்
	11	நிவ்ருத்தீஸ்ய	நிவ்ருத்திஸ்ய
	18	காரணுதிகள்	காரணுதிகள்
	22	இகமவிருத்தி	இதம்விருத்தி
78	5	ஷாண	ஷாணஃ
	18	பஞ்சனு	பஞ்ச
	20	வைசுவானராதியாரும்	வைசுவானராதியரும்.
79	5	வரிவஷணை	வரிவஷணைஃ
	26	பிராணமயலாற்	பிராணமயனுற்
80	19	மென்னமெய்து	மென்னவெய்து
	23	ணிசவில்சத்	ணிகவில்சத்
	24	பொழுமே	பொழுதுமே
	26	ஸவஷஸஃ	ஸவஷஸஃ
81	14	யாவனென	யானென
	21	ஸவஷாயிஷ்டாந	ஸவஷாயிஷ்டாநஃ
82	13	சுவேணா	சுவணஃ
83	24	சுவாரிஷீஞ	சுவாரிஷீஞஃ
84	3	பிரவாம்	பிரிவாம்
	12	தால	மால
	25	பிதங்களா	பூதங்களா
85	5	ஸவஷகாரண	ஸவஷகாரணஃ
	23	வ்யூஹ	வ்யூஹம்
86	19	ஹகஸதஸப்ரஷ்வெ	ஹகஸதஸப்ரஷ்வெஃ
87	4	ஸாந	ஸாந
88	1	மேமேபாக	மேலாக
	10	மூலில்கரி	யயலில்கரி
	11	யயக	மூநிக
89	14	ஸவஷகார	ஸவஷகாரஃ
90	7	சுநெகரஷ்வொ	சுநெகரஷ்வெஃ
91	2	பாசத்தன்கறு	பாசகத்தென்று
	6	ஹகரஷ்வெ	ஹகரஷ்வெஃ
	28	கவுபா	கவபா

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
92	7	வராஹோயோகா	வராஹோயோக:
	26	விடுத்தப்	விடுத்துப்
93	2	புரிவஸ்தா	புரிவஸ்து
	5	பொருண்	பொருண்
	6	படிமக்	படிகத்
	9	தனி	தனை
	11	ஸஹ	ஸஹ:
95	11	நிலத்தகைமை	நீலத்தகைமை
	22	பிரப்ஞ்சமுன்மை	பிரபஞ்சமின்மை
	24	வேண்டும்மென்னிற்	வேண்டுமென்னிற்
	25	முத்தருமேல	முத்கராலே
	27	தயங்களுட	தயங்களுட
96	1	நிஷ்ப்ரவஞ்ச	நிஷ்ப்ரபஞ்ச:
97	5	ஸநாதநாவிஷ	ஸநாதநாவிஷ
	24	இப்பின்	இப்பியின்
98	25	முலத்தோடு	மூலத்தோடு
99	3	சாரமரிகச்	சாரமாச்
	6	நாநாரூபவோ	நாநாரூபவ:
	7	ரூபவிண	ரூபவிண:
	8	வாக்யத	வாக்யத:
100	1	ஸஹேஹ	ஸஹேஹ:
	11	ரூபமாய்	ரூபமாய
	17	நிருவிசேடின்	நிருவிசேஷன்
	25	வியாபி நிருவிசேஷ	வியாநிருவிசேஷ
	26	நிர்விசேஷ	நிர்விசேஷ:
102	7	தற்றதத்துவிதமாந்	தற்ற தத்துவிதமாந்
	20	வாஞ்நி	வஞ்நி
103	3	ஸவாஹாவ	ஸவாஹாவ:
	28	லணிந்தே நாளும்	லணிந்தெ நாளும்
	29	புலயனென்றனையுங்	புலயனேன்றனையுங்
104	1	ஸவாசேதாஹவ	ஸவாசேதாஹவ:

உ

ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம:.

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய நம: | ஸ்ரீ நடேசாய நம: |

லக்ஷணவிருத்தி.



முத்திரா மேச முனிவரர் பதத்தை முதிர்தயா நிதிமலர்ப்பதத்தை, யுத்தம வசுவத் தேசர்தம் பதத்தை யுயர்பிர மாநந்தர் பதத்தைச், சித்துரு வெனையு மாக்கிய வீர சேகரர் பதத்தையும் வணங்கி, முத்தியை யருளு மிலக்கண விருத்தி மொழிப்பொருள் பொழிப்பதா யளிப்பாம்.

பாயிரம்.

ஆரணம் பன்முகத் தால நாதியே
காரண னேயெனக் கழறி யேத்திடும்
பூரண மாஞ்சிவன் புதல்வ னாகிய
வாரணா நநத்தனை வணங்கி வாழ்த்துவாம்.

காரண மானதன் கலையி னோர்கலை
தாரணி தனிலுறுந் தலங்கண் மேவிவந்
தாரண வுரைப்படி யடங்கு மம்பலப்
பூரண நடேசனைப் போற்றல் செய்குவாம்.

சித்தரும் பரவா நின்ற சீர்மிகுங் கழனி தன்னிற்
பித்தனா மெனையு மாளப் பேரரு ளுருவா யுற்ற
முத்தனா முத்தி ராம முதல்வனாற் கமல பாத
நித்தமுந் தொழுது வாழ்த்தி நெஞ்சினி லிருத்தல் செய் [வாம்

வானவ ரசமாந் தொடர்பினா லுலகோர் வழுத்துறும் வந்நியைங் கரனை, வானவ ரதந மணியறு முகனை மாசறு சொற்றவாளிறையை, வானவர் முதுவன் பாலந வலவன் வணங்குநற் றிருநேலை மாதை, வானவ ரதனா முத்துரா மேச வள்ளலை வணங்கிவாழ்த் திடுவோம்.

பிரமத்திற் குறிய வாகும் பெயர்கணூற் றெட்டி னுக்கும்
விரிவதாம் பனுவ னூலின் விளங்கிய பொருள்க ளுள்ளத்
துரமதாத் தரிக்க வேண்டி யுற்றிடுங் கவிக ளாகப்
பரமசற் குருவா யோங்கும் பகவனின் னருளாற் செய்தேன்.

பன்னுபா யிரக்கவிக ளிருமூன் றாகும் பகர்நூலின் கவிநூறே டொன்ப தாகு, மன்னகவி முற்றுநிறைந் தேங்கு நின்ற வஸ்திபா திப் பிரிய சொரூப மான, மன்னன்முத்தி ராமலிங்க தேசி கேசன்மருவு மென திதயமதுற் றுரைத்த தாகுஞ், சொன்னவிந்நூ றனிற்கவியோன் றுருத்த மேனுந் துகளறவே யறிந்தவர்கள் பிரம மாவர்.

பாயிரம் முற்றிற்று.

ஆத்மஸ்வரூபநாம்நாம் அஷ்டோத்தரஶதாநி ச |
ஏகஸ்யாப்யநுஸந்தாநாஜ்ஜீவந்முக்தௌ ந ஸம்ஶய: ||

தன்னுடைய சொரூபத்தின் பெயர்களாகிய நூற்றெட்டினுள் ஒன்றன் பொருளை யநுசந்தித்த போதினும் ஜீவன் முக்தனாவதில் ஐயமே கிடையாது. 1

2 நிர்விகாரோ ஜ்ஞாநரூபோ ஹ்யஸங்கோஹம் நஸம்ஶய: |
ஸ்வயம்ப்ரகாஶரூபோஸ்மி ஸ்வப்ரகாஶஸ்ஸதா ||

யான் நிர்விகாரன், யான் ஞானரூபன், யானசங்கன் ஐயமின்றாம், சுயம்பிரகாச ரூபனா யுள்ளேன் எப்போதும் சொப்பிரகாச ரூபனாயுள்ளேன். 2

3 ஆநந்தரூபஸ்ஸத்யஶ்ச நிஷ்க்ரியோ முக்த ஏவ ஹி |
அகர்த்தா ஹ்யபோக்தா ச நிருபத்ரவ ஏவ ச ||

யானே ஆனந்தரூபன், சத்தியன், நிஷ்கிரியன், முக்தன், அகர்த்தா, அபோக்தா, நிருபத்திரவனே யாவன். 3

நிர்லேபோஹம் ந ஸந்தேஹோ நிஸ்ஸம்பந்தஸ்ததைவ ச |
கூடஸ்த ஆத்மா நிர்தோஷோ ஹ்யப்ரமேயஸ்ஸதா ||

யான் நிர்லேபன் என்பதிற் சந்தேகமே கிடையாது, அவ்வாறே நிச்சம்பந்தன்; கூடஸ்தன், ஆத்மா, நிர்தோஷன், எப்போதும் அப்பிரமேயன். 4

ப்ரத்யக்ஷோऽஹமணுஶ்சாஹமஶரீரோ நிரிந்த்ரிய: |
அப்ராணோऽஹமமநா நிர்மலோऽஹம் நிஶுத்தபுத்தக: ||

பிரத்தியக்ஷன் யான், அணு யான், அசரீரன், நிரிந்திரியன், அப்பிராணன், அமநசன், நிர்மலன், சுத்தன், புத்தன். 5

ஸர்வஜ்ஞ: பரமாநந்தோ ஹ்யஹம் ஶம்புரசலோऽஸ்ம்யஹம் |
நிர்குணோ நிர்விகல்போऽஹம் நிராகாரோऽஸ்ம்யஹம் ஸதா ||

சர்வஞ்ஞன், பரமாநந்தன், சம்பு, அசலன் யான், நிர்க்குணன் யான், நிருவிகற்பன் யான், நிராகாரன் யான் எப்போதும். 6

நித்யமுக்தோऽநாதிமுக்தோ ஹ்யச்யுதோऽஹம் ஸதாபி ச |
க்ஷேத்ரஜ்ஞோऽஸ்ம்யஹம் த்வம் ச மநோவாசாமகோசர: ||

நித்திய முக்தன், அநாதி முக்தன் அச்சுதன் யான், எப்போதும் க்ஷேத்திரஞ்ஞனும் நீயும் ஆவோம், மனோ வாசாமகோசரன் யான். 7

அவ்யாக்ருதோऽக்ஷரோ த்ருக் ச ப்ரத்யக்சிந்மாத்ரக: ஸதா |
நிரீஶோऽஹம் நிர்ஜீவோऽஹம் நிஷ்ப்ரக்ருதிஸ்ததா ||

அவ்வியாகிருதன், அக்ஷரன், திருக்கு, பிரத்தியக்கு, சின்மாத்திரன் சத்து; நிரீசன் யான், நிர்ஜ்ஜீவன் யான், அவ்வாறே நிஷ்பிரகிருதி யான். 8

அஸம்ஸாரீ ஹ்யபத்தோऽஹம் நிரவயவஸ்ததா |
அபரோக்ஷ: ஸ்வயம் ஸாக்ஷாதத்வயோऽஸ்மீதி நிஶ்சிநு ||

அசம்சாரி யான், அபத்தன் யான், அவ்வாறே அவயவ மற்றவன் யான், அபரோக்ஷன் யான், சுயம் யான், சாக்ஷாத்தாக அத்வயன் யான் என நிச்சயிப்பாய். 9

அநுபாதேயரூபோऽஹம் ஸத்யம் ஸத்யம் ந ஸம்ஶய: |
அப்ரவ்ருத்த: ஶிவ: ஸ்வாஹமப்ருதோऽஹமரூபக: ||

அநுபாதேய ரூபன் யான் இதிற் சம்சயமே யில்லை சத்தியம் சத்தியம் சத்தியம்; அப்பிரவிருத்தன் யான், சிவன் யான், அபிருதன் யான், அரூபன் யான். 10

ശാന്തോഽഭയശ്ച നിത്യാനന്ദോ നിർവിഷയ ഏവ ഹി ।
ചിരന്തനഃ പുരാണശ്ച നായകശ്ച പുരാതനഃ ॥

சாந்தன் யான், அபயன் யான், நித்தியாநந்தன் யான், நிர்விஷயன் யான், சிரந்தனனாகிய புராணன் யான், நாயகனாகிய புராதனன் யான். 11

അഹം ശൂന്യോ മഹാശൂന്യോ നിർവൃത്തോഽകാമ ഏവ ച ।
അലോഭ ഉന്നതോഽക്രോധോ നിത്യഃ സർവഗതസ്തഥാ ॥

சூந்யன் யான், மகா சூந்யன் யான், நிவிருத்தன் யான், அகாமன் யான், அலோபன் யான், உந்நதன் யான், அக்குரோதன் யான், நித்தியன் யான், அவ்வாறே சர்வகதன் யான். 12

സർവാധാരോ നിരാധാര ആദ്യോഽനാദിരഹം വിഭുഃ ।
മഹാന്നിരഞ്ജനശ്ചാഹം കാരണശ്ചാപ്യകാരണഃ ॥

சர்வாதாரன் யான், நிராதாரன் யான், ஆதி யான், அநாதியான், விபு யான்; மகாந் யான், நிரஞ்சனனுன், காரணனுன், அகாரணனுன். 13

സാക്ഷീ സ്ഥാണുഃ പരിപൂർണോ ഹ്യനന്തസ്സർവസമസ്തഥാ ।
സർവാധിഷ്ഠാനകോഽഖണ്ഡോ ഹ്യപരിച്ഛിന്നകസ്തഥാ ॥

சாக்ஷி, ஸ்தாணு, பரிபூரணன், அநந்தன், சருவசமன், சருவாதிஷ்டாநன், அகண்டன், அபரிச்சிந்நன், அவ்வாறே. 14

അനാവൃതോ ഹ്യഹം സർവകാരണം ബ്രഹ്മ തത്സ്വയം ।
ഏകസദ്വസ്തുരൂപോഽഹം സർവാത്മാഹം ന സംശയഃ ॥

அநாவிருதன் யான், சருவ காரணனுன், பிரஹ்மமாகிய அதுவேயமே யான், ஏக சத்து வத்து ரூபன் யான், சருவாத்மாயான் என்பதிற் சம்சயமே கிடையாது. 15

സർവാകാരോ ഹ്യഹം സർവാവസ്ഥാസു സദാ സ്ഥിതഃ ।
അഹം ഹ്യനേകരൂപോഽപി ഹ്യേകരൂപശ്ച സർവദാ ॥

சருவாகாரன் யான், சருவ அவஸ்தைகளிலும் எப்போதுமிருப்பவனே யான், அநேக ரூபன் யான், எப்போதும் ஏகரூபன் யான். 16

பரமார்த்தோ வஸ்த்வஸ்மி நிஷ்ப்ரபஞ்சோஹமேவ ஹி |
நாநாரூபோப்யபேதோஹம் நிர்விஶேஷோத்வயோஸ்ம்யஹம் ||

பரமார்த்தன், வஸ்து, நிஷ்பிரபஞ்சன் யானே யாவேன், நாநா ரூபன் யான், அபேதன் யான், நிர்விசேஷன் யான், அவ்வாறே அத்வயன் யான். 17

அஹம் ஹி ஸர்வபாவஸ்ய ஸர்வதா ஸர்வதோமுக: |
தத்வ்ருத்த்யோதயதே ஜ்ஞானம் லக்ஷணாவ்ருத்திருச்யதே ||

யானே சர்வபாவன், எப்போதும் சர்வதோமுகன் யான், அவ் விருத்தியால் ஞான முண்டாம், இஃதிலக்கணாவிருத்தி யெனவியம் பப்படும். 18

உக்த குரோ: காருண்யஸிந்தோஶ்சோபதேஶே யோத்ர நந்ததே । தஸ்ய ஜ்ஞானஞ்ச மோக்ஷஶ்ச ஸித்த்யத்யேவ ந ஸம்ஶய: ।

கருணைக் கடலாகிய எனது குருவின் றிரு வருளாற் கிடைத்த வுபதேசத்தில் யாவன் மகிழ்ந்து இரமிக்கின்றானோ அவனுக்கு ஞானம் ஐயமே யில்லாமற் சித்திக்கும். 19

ஶ்ரீஸச்சிதாநந்தாய ஸஹஜாநந்தரூபிணே ।
ஸாக்ஷிணே நந்தரூபாய நிஷ்க்ரியாய நமோ நம: ||
ஶ்ரீ ஸத்குரு ஸச்சிதாநந்தஸத்குருப்யோ நமோ நம: |

சச்சி தாநந்த வடிவமாய்ச் சரிதொழி லிலதாய்
முச்ச கம்புகழ் முதிர்தயை முகிழுமெம் மூர்த்தி
அச்சு வத்தமெய்ந் நாதனே ஆரிய மணியே
புச்ச மென்னுமுன் பொன்னடி போற்றியே போற்றி. 20

குரோ காருண்யஸிந்தோ த்வத்த்ருஷ்ட்யா நிர்மலயா ஹ்ருதி |
நிர்விகாராதிநாமானி ஸர்வபவனானி ச ।

என்னை யாட்கொளு மிறைவனே யெழிலளிக் கடலே
என்னு ளத்தினைக் கோயில்கொள் ளென்னுயிர்த் துணையே
உன்னு ருவினை யுரைப்பதி லுருக்கமே மிகுந்து
மன்னு நிர்விகா ராதிநா மங்களே மலரும். 21½

ஸா மஹாலக்ஷணயா வ்ருத்த்யா ஸம்க்ஷேபாத்ராமதாந்த்யஸா ॥
ஸ்வஸ்ய கடாக்ஷபூரேண வ்ருஷீச ஜ்ஞாநஸம்பதே । ஸா
ஸ்வஸ்யாவஸ்யமர்த்யாந்நஸம்பந்நாத்த்ரேணாவிஜ்ஞாநவர்த்தேவத ॥

பன்னு பாகவி லக்கணை யாற்பல முறையான்
அன்ன வைசதத் ததிகமா மெட்டெடன வறைவா
உன்னு யர்திருக் கருணையின் மகிமையா லுணர்வே
மன்ன யானுரை செய்குவன் மாதவேந் திரனே.
ஒருபெ யர்ப்பொரு ளுன்னுத லானுமே
கருவ மூடசி காமணி யாயினும்
மருவு மெய்யுணர் வென்பம றையெலாம்
குருவின் பாத்முட் கொண்டத னலரோ. 23

1 நிர்விகாரன்.

சொல்லவுறு மைங்கோச நாமல்ல வதனினற் றேற்றலிறனரை திரையுடன் றாய்திலா வாலிபம தார்தியுந் தாகபசி துனுபேலன்பெலம தில்லோ, னெல்லையற வேசோனவ னவையிலோ ளுதியுமிகழ்காம மதமு லோப மிழிபயங் குரோதங்க ளாதியுஞ் சுகதுக்கமியலுமடி மாற மாற, மல்லவுட னேகாண லாதியும் மறியாமை யறிவோடு சுழுத்தி விடய மவைகடமின் வருசுகமு மாகவைங்கோசத்தி னமர்விகா ரம்மே மக்கோன், றில்லையவி தம்பஞ்சகோசங்க ளுறவிகா ரங்களவை யின் மை யினையு மிலகவறி கின்றவறி வேயுருவ மானதா லியாநிரு விகாரி யாமே. 1

1 நிர்விகாரம்.

ஸதா ஸ நிர்விகாரஸ்ஸ ஸவிகாரஸ்ய ஸர்வதா ।
பஞ்சகோசவிஹீநத்வாத்ஸ ஜந்மாத்யபாவத: ।
க்ஷுத்பிபாஸாதிஷட்த்வம் ராகத்வேஷபயாதய: ।
கர்த்ருத்வம் நஹி ஸந்தித்தபாவஸ்ஸர்வமேவ ஹி ஸர்வதா ।
கோபாதயஸ்ஸர்வத்ர ஸ்வாத்மப்ராமாண்ய ந ஸ த்ருச்ய: ॥
ஸஸ ஜ்ஞாநஸ்வரூபத்வாந்நிர்விகாரோ ஜாயதே ஸதா ।

எப்போதும் விகாரத்தோடிருக்கும் எனக்கு நிருவிகாரத்தன் மையானது எங்ஙன் சம்பவிக்கும் எனின்? எனக்குப் பஞ்ச கோசங்க ளின்மையானே பிறப் பென்பவை யின்றும், பசிதாக

முக்லிய தன்மத் தன்மையும், இராகத் துவேஷ ப்ய் முதலியவை களு மின்றும், கருத்துருத் தன்மை யென்பது மொரு சிறிதுமெனக் கின்றும், அவ்வாறே துயிலில் வரும் சுகமு மின்றும், கோசங்களின் பிறப் பிறப்புகளைக் காண்போனுந் தன்மை யுண்மையின் அதன் வியா பாரங்கள் ஒருசிறிதும் எனக் கில்லை. எனக்கு ஞான சொரூபத் தன்மை யுண்மையின் யான் எப்போதும் நிருவிகாரனுகவே யிருக் கின்றேன் என நினைதி. 1

2 ஞான ஸ்வரூபன்.

இன்னலே யுருவ மான விந்தவைங் கோசங் கட்குந்
துன்னுமக் கோசங் கட்குச் சொல்விகா ரங்க ளுக்கு
மன்னிய மாக நின்றே யவைகளை யறிவ தாலே
மன்னிய ஙாமே ஞான வடிவமென் றறிந்து கொள்ளே. 2

2 ஜ்ஞாநஸ்வரூபஃ.

ஜ ஜ்ஞாநஸ்வரூபத்வம் கயமெஞ்வலி தத்ஸஂரண ।
கொஶாநாஂ தஷிகாராணாஂ வெஷக்ஷணொந தஜ்ஞதஃ॥
அஸஂகாநஸ்ஜா தஸாத ஜ்ஞாநஸ்வரூபவாநு ।

எனக்கு ஞான சொரூபத்தன்மை எங்ஙனமா மெனின்? கூறக் கேட்குதி! கோசங்கட்கும் அவற்றின் விகாரங்கட்கும்வேறாக இருந் தே அவற்றைக் காண்டலினுனும், எனக் கெப்போதும் அசங்கத்தன் மை யுண்மையினு னும் யான் ஞான சொரூபன். 2

3 அசங்கன்.

ஞானமில்கா லந்தனினு ஞானந் தோன்றி நண்ணுபினு மூன்ற வத்தை தமிலே தோன்று, மூனவுல கங்கள்வரும் போதுங்கூட வுதி யாம லேகின்ற போதுங் கூட, வீனமுட னேகாம லிவைக ளியாவு மியல்பாகக் காணுமறி வேசொ ரூப, மானதனு லொன்றுடனுந் தோடக்கற் றென்று மமர்ந்திடுநா மசங்கனென வறிந்து கொள்ளே.

3 அஸஂகஃ,

அஸஂகத்வம் கயஂ ஜெ ஸ்வாஞிதிவெத்ஸஂரண தக்வதஃ ॥
ஜ்ஞாநாஸ் வஸ்வஹ்ஂ ததஃ வஸ்தாஉவஸ்தாத்ரயெஷ்வபி ।

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அசங்கத்தன்மையானது எனக்கு எவ்வா றுண்டாகுமெனின் ? உண்மையை யுரைப்பக் கேட்டி ! ஞானத்தின் முன்னரும், அதன் பின்னரும், மூன்றவத்தைகளிலும், உற்பத்திஸ்திதி விநாச முதலியவைகள் கோசங்கட்கே யல்லாமல் எனக்கின்றும். உலக முற்பத்தியாம் போதோ எனக் குற்பத்தி யெங்குங்கிடையாது ! அவ்வாறே அதனிலய காலத்திலும் எனக்குச் சித்துருவத் தன்மை யிருத்தலானே இலயமுமின்றும். சொயம்பிரகாச ரூபத்தன்மை யுண்மையின் யான் அசங்கனாக இருக்கின்றேனென்று துணிதி. 3

4 ஸ்வயம் பிரகாசன்.

சகமதனைப் பிரகாசஞ் செய்யுஞ் சண்டன் சசிவஹ்நி யாதியையு மவை விளக்கு, மகஞ்சட்சு முதலேங்கோ சத்தை யுஞ்சோல்லவை யின்விகா ரங்களையு மவையின் றேற்றந், தகவுதிதி மரித்தன்முதலேயும்வி ளக்குந்தமையொன்றும் விளக்கவோணுத் தன்மையாலே, யிகழ்வ்லதா மியாமிகவுஞ் சுயம்ப்ரகாச னென்னவித யத்துமதி யாக வேண்ணே. 4

4 [illegible].

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அப்பிரகாசனுகை யிருக்கும் எனக்குச் சுயம்பிரகாச ரூபத் தன்மை எங்ஙனமா மெனின் ? இயம்பக் கேட்குதி ! அப்பிர

காச தீ, நக்ஷத்திரம் சூரியன், சந்திரன், மின்னல், மநம், புத்தி, இந்திரியம், என்னும் இன்னால் விளக்கப்படு மிவற்றால் நீ விளக்கப்படமாட்டாயாதலினாலும், நினது பிரகாசத்தானே விளக்கப்படு மிவற்றிற்கு மாயாமயத் தன்மை யிருத்தலினாலும், சொப்பிரகாசத்தன்மை யேதுவினாலும், சுயம்பிரகாசனே நீயும் யானும் என வுணர்தி.

5. சொப்பிரகாசன்.

நாமிலமே லிங்கோச முதலா கின்ற நலமில்சகங் களையறிவா ரிலாமை யானுந், தீமையிலா வறிவுருவே யான நம்மாற் செகங்களெலா மிகவறியப் படுகை யானு, நீமமதா யாவையுமிவ் விதமாய்க் காணு நிகரினமை யறிவதற்கோ ரறிவு தானுந், தோமறவே வேண்டாத படியி னானுந் துகளறுசோப் பிரகாச னமென் றோர்வாய்.

5. ஸ்வப்ரகாஶ:

[illegible] ||
[illegible] |

சொப்பிரகாசத் தன்மை யெனக்கு யாங்ஙனங் கூடுமோவெனின்! தானே விளங்கலினாலும், என்னை யல்லாது பஞ்ச கோசங்களையும் காண்பவன் வேறொருவன் இல்லை யென்னும் அநுபூதியினாலும், என்னை யுணர்வதி லந்நிய வுணர்வு வேண்டப் படாமையானும், ஆநந்தத் தன்மை யுண்மையானும் சொப்பிரகாச னென்னல் கூடு மன்றே. 5

6. ஆநந்தன்.

காலமொரு மூன்றிலுஞ்செய் யுபய கன்மங் கருதுமைங்கோ சச்செயலாக் காண்கை யானுஞ், சீலமிலைங் கோசங்க ளிலாத போது திரள்கன்மந் தோன்றாமை யானு நாமிவ், வேலுசெயற் கோசத்தின் புறம்ப தானு மியாங்கருத்தா வுடன்போக்தா வன்ற தாலே, காலவுறு கன்மபெந்த சென்ம மாதி தரித்தலில்யா மாநந்த ரூப னமே.

6 ஆநந்த:

[illegible] |
[illegible] ||

[illegible]
[illegible]
[illegible]

எப்போதுந் தாக்கியா யிருக்கும் எனக்கு ஆநந்தத் தன்மை யாத லெங்ஙன மெனின்? இகலோக பரலோகங்களை யடையும் பொருட்டு எக் கருமஞ் செய்யப்படுகின்றதோ, அது பஞ்சகோசங்களானே பண்ணப்பட்டதாம்; எங்குக் கோசங்க ளுண்டோ அங்குக் கரும முண்டாம்; அவை யழியின், கரும மில்லாததே யாகும். ஆகலின், கோசங்கள் செய்த இரண்டு கருமமும் எனக்கெங்குஞ் சிறிது மின்றாம். எனக்குச் சத்திய சொரூபத் தன்மை யுண்மையின் யான் ஆநந்தனாக இருக்கின்றேனென்று திண்ணமா யெண்ணுதி. 6

7. சத்தியன்.

திநமாதம் வருடமோடு காலந் தோறுந் திகழ்சநநந் தோறும் வருமூன் றவத்தை தம்மி, லினமாகிப் பிறந்திருந்து போகுமைந்தா மிழிவான கோசத்தின் வேறு மான்மாப், பனியான கோசமுதிப் பதற்கு முன்னும் பஞ்சவித கோசமழிந் தொழிந்த பின்னுந், தனியான வொருவிதமா யிருக்கா நின்ற தன்மையினாற் சத்தியன்யா மெனவே யோர்வாய்.

7 ஸத்ய:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

எப்போதும் அசத்திய சொரூபியா யிருக்கப்பட்ட எனக்குச் சத்தியத் தன்மை யெவ்வண்ணஞ் சார்ந்திடு மெனின்? யான் மூவிடங்களிலும் ஓரே யறிவுருவனா யிருப்பன். அங்ஙனமே மறு திநங்களிலும், மாதம், வருடம், யுகம், கற்பம் என்பவற்றிலு மிருப்பன். கோசங்களோ உற்பத்தி நாச முடையனவாம், ஏகனாகி யிருக்கு மெனக்கு நிஷ்கிரியத் தன்மை யுண்மையினானே கேவலம் சத்தியன் யானென வுணர்தி. 7

8. நிஷ்கிரியன்.

இகவுலகம் பரவுலகங் களைக்கு றித்தே யியற்றுபல விதகன்ம மவைக ளாலே, பகருறுமேப் போதினுமே விவக ரிக்கும் பஞ்சவித

கோசத்தின் சாட்சி யான, விகழ்வினமைப் புறம்பாகக் காண லாகா திருந்தாலுங் கிரியையிலாத் தன்மை யாலே, புகழ்தலுறு நாந்திந நிஷ் கிரிய னென்றே புண்ணியநீ யறுதியதா யெண்ணு வாயே.

8 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌃

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

நிஷ்கிரியத் தன்மை யெனக் கெங்ஙனங் கூடு மெனின்? துயிலின்கண்ணே யாவருக்கும் அநுபவ முண்மையின் என்க. அன்றியும், இக பர சுகப் பொருட்டுக் கோசங்கள் எவ்வெக் கருமங்களைச் செய்கின்றனவோ, அவ்வவற்றின் சாக்ஷி யான். என்னை யல்லாது அந்நியன் காண்போ னில்லை. எனக்கு முக்தத் தன்மை யுண்மையின் யான் நிஷ்கிரிய ஞவே னென் றுணர்தி. 8

9. முக்தன்.

ஞாநமுதித் ததன்பின்பைங் கோசங் கட்டு நமைவேறாய் மிக வுமறிந் ததுவே போல, ஞாநம்வரு முனுங்கோச மவைக்கு வேறு நாமிருந்தோ மென்பதுசித் தித்த லானும், பாநமலாக் காலத்தும் பஞ்ச கோசம் பண்ணினசஞ் சிதகன்மங் தமைக்கு றித்துப், பாந மதா நாங்கருத்தா வாகா தாலும் பலவிதசஞ் சிதமறுநா முத்த ஞமே.

9 𑌮𑍁𑌕𑍍𑌤𑌃

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

முக்தத் தன்மையானது எனக் கெங்ஙனஞ் சித்திக்கு மெனின்? எப்போதுஞ் சாக்ஷியா யிருக்குங் காரணத்தா லென் றுணர்தி! இப்போது கோச சாக்ஷித் தன்மை யுனக் குளதாம்; ஞாநத்திற்கு முன்னரும் எப்போதுமே அத்தகைமை யுனக் குளது; அஞ்ஞாந காலத்திற் கோசங்களா லாக்கப்

பட்ட கருமங்கள் உன்னைப் பற்றா; சஞ்சித கருமங்களினின்றும் நீ முக்தனே யாவா யாகலின், நீ யெப்போதும் அறிவுருவனே யாதி; எனக்கு அகர்த்துரு ரூபத் தகைமை யிருத்தலின், யான் முக்த னென ஐய மில்லாமல் அறிந்து கொள்ளுதி.9

10. அகர்த்தா.

ஞாநமுதித் ததன்பின்புங் கன்மஞ் செய்யு நவையுறுமைங் கோசங்க டமக்கு வேறு, யீனமிலா நாந்திநமு மிருப்ப தாலே யின்று முத லாகாமி யங்க ளாக, வூன்மதாம் பஞ்சவித கோசஞ் செய்யு முறுகன்ம பெந்தநமக் கிலைய தாலே, ஞாநவுரு வாகியநா மகர்த்தா வென்றே நாடியுளந் தனிற்றிநமு நண் ணு வாயே.

10 அகர்த்தா

அகர்த்ருத்வம் கதம் மே ஸ்யாத் ஸதா கர்த்ருஸ்வரூபிண:।
ஜ்ஞாநாதூர்த்வம் து யே கோஶா: க்ரியந்தே தத்விலக்ஷணே॥
விநாபி மயி திஷ்டந்தி ஸர்வதா மாம் ஸதா நஹி।
அதோ ஹ்யாகாம்யஸஞ்சிதம் கர்மாண்யகர்த்ருத்வம் ந ஸம்ஶய:॥

எப்போதும் கருத்தா ரூபமா யிருக்கப்பட்ட எனக்கு அகருத்தாத் தகைமை யெங்ஙனங் கூடும்? ஞாநத்தின் பின்னர் எவற்றாற் கருமங்கள் செய்யப்படுமோ அக்கோசங்களினும் வேறாய சிந்மாத்திர என்னிடத்தில் வாகிய ஆகாமிய சஞ்சித கருமங்கள் கிடையா; அபோக்துருத் தன்மை யுண்மையின் யாதொரு கருமங்களும் எனக் கின்றாதலின் சமுசய மில்லாமல் 10
யான் அகருத்தாவென வெண்ணி வாழ்தி.

11. அபோக்தா.

பிராரத்த கன்மமதாற் சரீர நாசம் பெறுமளவும் வருகின்ற சுக துக் கத்தை, யிராகவெறுப் புடன்புசிக்கு மைங்கோ சங்கட் கீனமின் மங்கியமா யிருப்ப தாலே, விராவுசுக துக்கமவை புசிக்கின் றேனும் மேவாமை யானுமறி வாமே மக்குப், பிராரத்தம் வேண் டாத படியி னும் பேசுகின்ற வபோக்தாநா மெனவே யோர்வாய்.

11 அபோக்தா

அபோக்த்ருத்வம் கதம் மே ஸ்யாத் ஸதா போக்த்ருஸ்வரூபிண:
ப்ராரப்தம் து யதா ஸுகதுக்கம் போக்த்ருஸ்வரூபிணே॥

ராகத்வேஷயோர்தேஹவஸ்துகார்யேஷ்வேவ ந ச வ்ருத்த: |
நிருபத்ரவதா ச ஸ்வாத்மனோஹங்காரம் ந ஸம்ஶய: ||

எப்போதும் போக்தா வடிவமா யிராநின்ற எனக்கு அபோக்தாத் தன்மையானது எங்ஙனங் கூடும் எனின் ? கேட்டி ! பிராரப்தம் முடியும் வரையும் எச் சுக துக்கங்களும், கருமங்களும் உண்டாகி யநுபவிக்கப் படுகின்றனவோ, அவை இராகத் துவேடங்களோடு கூடிய பஞ்ச கோசங்களாலே யநுபவிக்கப்படுகின்றனவே யன்றி; அறி வுருவமா மெனக் கில்லை, எனக்கு நிருபத்ரவத் தன்மை யிருக்கின்றமையானே யான் அபோக்தா வெனவைய மிலாது உணர்வாய் ! 11

12. நிருபத்ரவன்.

நணிவாத பித்தஞ்சி லேற்பனம தாதியாய் நவில்வியா தியுமுறிச்ச னலிசூடு மிடியாதி பீடையுந் தூலதனு நண்ணுறும லாது சூக்க, தனுவினுக் கிலதாலு மாமயக் கங்குரோ தங்காம லோப மூமைசார்சேவிடி லச்சைமுத லானசுர மேசூக்க தனுவினுக்கன்றி மூல, தனுவினுக் கில்லாத தாலுமே காரியத் தனுவாக்கு சுரமு மூல தனுக்குறுத லாலுமித் திரிவிதசு ரங்களுந் தனுவினயல் சீவ னுக்கே, சனியாத தாலுமே யழிவா நமக்குப்ர சங்கம்வர ஞாய மில்லாத் தன்மையா னிருபாதி யாகின்ற நாமிகத் தவறினிரு பத்தி ரவனே.

12 *நிருபத்ரவ:*

நிருபத்ரவதா ச ஸ்யாத் கதம் து:கஸ்வரூபிண: |
வாதபித்தச்லேஷ்மஜந்யா வ்யாதய: கோடிஸம்பவா: ||
காமக்ரோதாதயஸ்ஸாந்திதாந்த்யாத்யாஶ்ச மநோமயா: |
தேஹத்வயஸ்ய சீஜம் காரணம் தந்நிவர்த்தகம் |
ஸ்தூல:கம்போஹாயதோ தேஹோ ஜீவஸ்யாபி ந ஸ்ப்ருஶ்யதே ||
விகாரோஸ்ய ஸ்வத: கோபி ஜீவா நாஸ்தி யத: ஸ்தித: |
விகாரேஸ்வஸம்பாவ்யா ஜீவா ஸாக்ஷிணீ கா கதா |
நிர்விகாரஸ்வரூபத்வாத் தஸ்மாதஹம் நிருபத்ரவ: |

துக்க சொரூபியா யிருக்கும் எனக்கு நிருபத்ரவத் தன்மையானது எங்ஙனமாம் ? வாத பித்த சிலேஷ்ம ஜந்நியங்களாகிய கோடி வகையாம் வியாதிகள் தூல தநுவினுக்காம்; காமக் குரோதாதி சாந்தி தாந்தியாதிகள் சூக்கும தநுவினுக்காம்; இரண்டு

தறுக்கட்குப் பீஜமாயிருப்பது காரண தறு வெனப்படும்; கடம் மண்ணை விடாததே போலச் சுராதிகளை விட்டுந் தேகங் காணப் படுவதே யிடையாது; சித்தா யிருத்தலினாலே சுயமாகவே எச் சுரமும் சிதாபாசனிடத்திற் காணப்படுவ தில்லை; சிதாபாசனிடத் திலும் சம்பவிக்கமாட்டாதனவாய சுரங்கள் சாக்ஷியினிடத்திற் சம்பவிக்குங் கதை யெங்கே! எனக் கெப்போதும் நிர்லேபத் தன்மை யுண்மையின் யான் நிருபத்ரவன் என் றெண்ணி வாழ்தி.

13. நிர்லேபன்.

பகர்தலுறு தூங்கினவன் கையிற் றங்கும் பதார்த்தமது நீங்கி மிகத் தானே செல்லுந், தகைமையுற ழுந்மய மாதி யான தகும் பஞ்ச கோசங்க ளான்மா வாக, நிகழ்தலுறு மேமக்கயலாய்த் தோன்றி வேறாய் நின்றுபுறம் பேயிறந்து நீங்க லாலே, யிகழ்விலதா யிருக்கின்ற நாமே நித்த மீனமிலா நிருலேப னெனவே கோள்வாய்.

13 𑌨𑌿𑌰𑍍𑌲𑍇𑌪𑌃

𑌨𑌿𑌰𑍍𑌲𑍇𑌪𑌤𑍍𑌵𑌂 𑌕𑌥𑌂 𑌮𑍇 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 [illegible] ।
𑌮𑌯𑌿 𑌕𑍋𑌶𑌾𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌾𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑍍𑌯𑌧𑍍𑌯𑌾𑌸𑌤𑍋 𑌹𑍍𑌯𑌮𑍀 ।
𑌉𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌵𑌿𑌲𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌗𑌗𑌨𑍇 𑌨𑍀𑌲𑌤𑌾𑌦𑌿𑌵𑌤𑍍 ॥
𑌮𑍇 𑌨𑌿𑌸𑍍𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌲𑍇𑌪𑍋𑌽𑌹𑌂 𑌸𑌦𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।

நிர்லேபத் தன்மையானது எங்ஙன மெனக்காம்? கருமத் தோடும் பற்றன்றோ வுளது? சாக்ஷியா யிருக்கும் என்பாற் கோசங்களும் அவற்றின் விகற்பங்களும் அத்தியாசமாதலினாலே மபக்கங்களே யாம். ஆகாயத்தில் நீலத்தகைமை முதலியவை போன்று உளவாகின்றன இலவாகின்றன; எனக்கு நிர்ச் சம்பந்த ரூபத்தன்மை யுண்மையின் எப்போதும் யான் நிர்லேப னென் றெண்ணுதி. 13

14. நிர்ச்சம்பந்தன்.

தானலவா யுறும்பஞ்ச கோசந் தன்னைத் தானு நம் படியாயு மவற்றின் வேறாய், ஞானவுரு வாகுநமை நமக்கு வேறாய் நண்ணவுமே வேண்டுமெனத் தவஞ்செய் தாலு, மீனமலா லாகாத படியி னானு மியணித்பவ பரோட்ச வேமக்கேக் காணு முனமுறங் கோச தொடக்கற்ற தாலு மொப்பி னிர்ச்சம்பந்தன மெனவே போர்வாய்.

14 [illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஹே பிரபுவே, சம்பந்த முடைய எனக்கு எங்ஙனம் நிர்ச்சம்பந்த சொரூபத்தன்மை யாதல் எனின்? கேட்டி! கோசங்கட்குச் சேதநத் தன்மையும், எனக்குத் திருசியத் தன்மையும் எப்போதும் பிரார்த்தித்த போதினும், இகழ்ச்சி மாத்திர முண்டாமே தவிர மாறாக அஃதொருகாலும் சம்பவிக்கவே மாட்டாதாம். யான் கூடஸ்தனும் அவிநாசியாய் யிருத்தலின் எப்போதும் யான் நிர்ச்சம்பந்தி யாவ னென நினைதி. 14

15. கூடஸ்தன்.

ஆற்றுகோல னடைகல்லே கூட மற்ற தவிகார மானவு மயவி காரந், தோற்றுதல்போ லறிவதனிற் பகுதி யீசன் றவிதசகஞ் சீவ ருதித் திறத்த லானுந், தோற்றியவை யழிவதற்கு மூல மாகிச் சுயஞ் சித்தா யிருக்கின்ற நாம வற்றிற், சாற்றுபற்றற் றுறலாவு மிகவும் யாமே சாரகர்த்தா வாகியகூ டஸ்த னாகும்.

15 [illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

விகாரியா யிருக்கு மெனக்கு ஹே தேசிகோத்தமரே எப்போதும் கூடஸ்தத் தன்மை யெங்ஙனமா மென்பதை யருளுவீராக! இரும்பின் விகாரங்கள் யாவுமே கூடக் கல்லின்கண்ணே கற்பிக்கப்பட்ட போதினும் கூடம் நிருவிகாரமா யிருப்பதே போல, யானும் எப்போதும் உளன் எனவும், கூடத்தைப் போல நிர்விகாரமா யிருக்கும் என்பால் ஜீவ ஈசுரர்களும், பிரகிருதியும் ஜகத்தும் உண்டாகின்றன ஒடுங்குகின்றன. எனினும் என்னி

டத்தில் அணுவளவும் விகாரங் கிடையா தெனவும் ஆய்ந்து ஆன்மத் தன்மை யுண்மையினனும், அவிகாரித் தன்மை யுண்மை யினனும், யான் கூடஸ்த னென வைய மில்லா தெண்ணுதி. 15

16. ஆத்மா.

நானென்று மானத்துக் கிடம தாக நவில்கின்ற வாங்மாவா ய்த் தோன்று நின்ற, வீனமுறு புத்ராதி தூல சூக்க விருதேகஞ் சீவ னுமே வேறு பேர்பெற், றானமிறன் புறம்பாகித் தோன்ற லாலு முறுமிவைகட் கப்பாலாய் நிருவி கார, ஞாநகனப் பிரமமதாந் தானும் வேறாய் நண்ணுத தாலுநா மாத்மா வாகும்.

16 [illegible]

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible]
[illegible] ।

மனைவி மக்க ளாதியோடு கூடிக் குடும்பியா யிருக்கும் எனக்கு ஆன்மத் தன்மை யெங்ஙனமாம்? மைந்தன் முதலாய்ச் சூரியம் வரையில் யான் என அபிமானிக்கின்றனர் (அறிவிலர்); அவற்றிற்குப் பெயர் தனித் தனியா யிருத்தலினனும், வடிவ வேற்றுமையினனும் அவை யகம் பொருள் எங்ஙனமாம்? நிர்த் தோஷத் தன்மை யுண்மையினனே எனக்கும் அவைகட்கும் விலக்ஷணத் தன்மையானது ஒளிர்கின்றது. அகம் பொருட் சொரூபமா யிருத்தலின் யான் ஆன்மாவே யாவேன் இதி லையமே 16
கிடையாது.

17. நிர்த்தோஷன்.

தோடமெனும் வாதமுத லான தோஷந் துன்னியு மிராகாதி யதனி னோடும், பீடுபெறு ஞாநவஞ்ஞா நங்க ளோடும் பிறத்தலுட னிறத்தலுமே மயம தான, சேடிலதாந் தூலவுடல் சூக்க தேகஞ் சேப்பியிடும் சீவனோடு பூதங் கட்குங், கேடிலதாய் வேறாகி யிருப்ப 17
தானுங் கிளத்தியநிர்த் தோஷனென வறிய வேண்டும்.

17 நிர்தோஷ:

நிர்தோஷத்வம் கதம் மே ஸ்யாத் ஸந்ததம் தோஷஸங்கிந: ।
வாதாதிதோஷாஸ்ஸ்தூலதேஹஸ்ய ராகாதிஸ்ஸூக்ஷ்மதேஹகே ॥
ஜ்ஞாநாஜ்ஞாநே து ஜீவேஸ்மிந் ஜடதாதி பூதபஞ்சகே ।
அபிதோஷோ ந கஸ்சிந்மே ஹ்யப்ரமேயத்வஹேதுத: ॥
நிர்தோஷஸ்ஸர்வதோஷாணாம் அபாவாத்விநிஸ்சிநு ।

எப்போதும் தோஷத்தையே செய்யப்பட்ட எனக்கு நிர்த்தோஷத்தன்மை யெங்ஙன முண்டாம்? வாதாதி தோஷங்கள் இத்தூல தேகத்திற்காம், இராகாதிகள் சூக்கும தேகத்திற்காம், அறிவு அறியாமைகளோ இச் சீவனிடத்தாம், ஜடாதிகள் பஞ்ச பூதத்திற்காம். அப்பிரமேயத் தன்மை யெனக் குண்மையினனே யாதொரு தோஷமும் என்பா லில்லை, சர்வ தோஷங்களும் இல்லாமையானே நிர்த்தோஷனா யிருக்கின்றேன் என நிச்சயிப்பாய்.

18. அப்பிரமேயன்.

ஆனபோறி யாலறிதல் பிரமே யந்தா னன்றியறி யாததப்ர மேய மாகு, மூனவிந்தி யத்தறிசத் தாதி கட்கு முட்கரணத் தறிகால திக்கு வஸ்து, வானதேனும் பிரகிருதி புருஷ ருக்கு மன்னியமா யிரு கரணத் தறிய லாகா, தீனமிலா தவைகளையு மறிவ தாலே யிலங்கு சற்சிற் சுகநாமப் பிரமே யன்றான்.

18. அப்ரமேய:

மமாப்ரமேயரூபத்வம் கதமேதச்ச்ருணு ।
இந்த்ரியைர்க்ருஹ்யதே யத்யத் ப்ரமேயமிதி கத்யதே ॥
இந்த்ரியவிஷயா பாஹ்யா: ஶப்தாத்யாஸ்ச ததா ।
ப்ரத்யக்ஷபாஹ்யவிஷயாஸ்ஸர்வாந்தஃகரணேந வி ॥ அப்ரமேயோஹமித்யேவம் ஸச்சிதாநந்தவாந்தத ।

எனக் கப்பிரமேய ரூபத்தன்மை யெங்ஙனமா மெனின்? கூறுகின்றேன் கேட்பாயாக. பொறிகளால் யாது யாது கவரப் பெறுகின்றதோ அவ்வியாவுமே பிரமேய மெனப்படும். அவை யாவை யெனின், வெளிப் பொறிகளாற் கவரப்படும் சத்தாதி விடயங்களும், உட்கரணத்தாற் கவரப்படும் திசை காலாதிகளு மாம். பிரத்தியக்ஷமா யிருத்தலின் யான் வெளியுட் கரணங்களாலும் அறியப் பெறாதவனே யாவேன் ஆகலின், சச்சிதாநந்த

ரூபனு யிருக்கப்பட்ட யான் அப்பிரமேயன் என்பதாக உள்
ளத்தில் உன்னி யுன்னி யுணர்தி. 18

19. பிரத்தியக்ஷன்.

ஏகதே சத்துடனேக் காலுந் தோன்று மியறமோ காரியமுப்
பாஞென் றிற்கு, மாகமேலா மேக்காலுந் தோன்றீ சற்கு மங்கங்கண்
முழுதினுமேக் காலந் தோயஞ், சோகமுடன் றேன்றுறசீ வர்க்கும்
வேறுய்ச் சோல்கால மவத்தைமுழு தினுமே நானென், ருகுபிரத்
தியக்ஷமதாய் விளங்க லாலே யறிவாநாம் பிரத்தியக்ஷ ஞகுந்தானே.

19. ப்ரத்யக்ஷ:

ப்ரத்யக்ஷத்வம் கத2ம் ஸெளஷுப்தஸ்ய ஸாக்ஷிண: ॥ ஸாம்ஶத: காய்யரூபம்ஸா ஹி ஸ்தி ஸர்வதா ।
ஸ்வரூபஸ்தாயீ வைகல்யமேவமனவதா ॥
ஸாக்ஷாத்காரணத்வாத் ப்ரத்யக்ஷோ ஹ்யஸௌ மத: ॥

சுழுப்தியின்கண்ணே சூனிய சொரூபியா யிருக்கப்பட்ட
எனக்குப் பிரத்தியக்ஷத் தன்மை யெங்ஙனமாம்? தமத்தின்
காரியமாய முப்பத் தொன்றும் யான் என தெனத் தோற்ற
முடையனவாம். சருவ அபிமானி ஈசுரராம். தேகாபிமானி ஜீவனு
வன். இவ்வியாவற்றிற்குங் காரணமா யிலங்கும் ஆத்மா பிரத்தி
யக்ஷமாம் அணுத்தன்மை யுண்மையினுனே யதுவே யானென் 19
றுணர்தி.

20. அணு.

பலகணி வெயிலினிற் பரந்து தோன்றிய
சலபர மாணுபோற் சாட்சி யாமெமை
யலைவுறு பொறியுறி தற்க லாததா
லிலகுநா மணுவென விதயத் துன்னுவாய்.

20. அணு:

அணுத்வம் த்வ கத2ம் ஸெளஷுப்தஸ்ய ஸாக்ஷிண: ॥
ஸவாக்ஷோபதேஶாயஸ்ய ஸ்வரூபஸ்யாதி ஸாக்ஷிக: ॥
தஸ்ய ஸூக்ஷ்மத்வாத் ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்மதர: ஸ்மிருத: ।
ஸர்வேஷாமபி வேத்ஸ்யாணுரேவ ஸூக்ஷ்மதர: ॥

எப்போதுந் தூல ரூபியா யிருக்கு மெனக்கு அணுத் தன்
மையானது எங்ஙன முண்டா மெனின்? கேட்டி! யாவற்றையும்

விளக்கும் கதிரவன் பலகணி வழியாக அணுவைப்போல் விளங்குதலொப்ப, ஆன்மா, எங்கு மிருந்த போதினும் ஆகாயத்தினும் அதி சூக்குமமா யிருத்தலின், எல்லா இந்திரியங்களாலும் அறியப் பெறுததாகிச் சரீர மற்றிருத்தலின் அணுவேயாம், அதுவே யானென் றெண்ணுதி. 20

21. அசரீரன்.

பகருமுட லுறுங்கன்மி யோகி லோக பாலர்வைசு வாநரனுதியசீ வர்க்குஞ், செகசரிர முடையீசன் றனக்கும் வேறாய்த் திகழுறுநாஞ் சிற்சுகசத் துருவ தாலுந், தகைமைநமக் கிவ்விதமோர் குடலமில்லா தாலுமுட லெனதேனநு பவத்தா லெற்கு. மிகவனியு மநித்தமெனும் யுத்தி லோக மேவுமத னாலுமசரீர னாமே.

21. அஶரீர꞉

ஸதா³ ஶரீரிணோ தே³ஹஸ்யாத்⁴யக்ஷத்வம் கத²ம் வத³ ।
ப்³ரஹ்மாதி³ஸ்தா²வராந்தாநாம் நாமரூபை꞉ ப்ருத²க் ப்ருத²க் । கர்மியோகீலோகபாலா விராடா³தி³மஹேஶ்வரா꞉ ॥
த்ரிகு³ணை꞉ கல்பிதா ஹ்யேதே ஜக³ஜ்ஜீவேஶ்வராத³ய꞉ ।
தேப்⁴யோ விலக்ஷணே மயி காசித்தநுர்ந ஹி ।
ஊஹயா ஹ்யாஸநா ஹ்யநித்யத்வாதி³யுக்தித꞉ ॥
நிரிந்த்³ரியத்வாச்ச நித்யம் ஹ்யஶரீரோঽஸ்ம்யஹம் ஸதா³ ।

சந்ததம் சரீரியா யிருக்கு மெனக்கு அசரீரித் தகைமை யெங்ஙனமாம் அருள வேண்டு மெனின்? கூறக் கேட்பாயாக. பிரஹ்மா முதல் ஸ்தாவரம் வரையாக வுள்ளன வெல்லாம் உருவாலும் பெயராலும் வேறு வேறும். கருமி யோகி லோக பாலர் விராட்டு முதலிய மகேசுரர் ஜீவேசுராதி ஜகத்துகள் என்பவை யாவும் மாயையினாலே முக்குண வயத்தாற் கற்பிக்கப் பெற்றனவாம். இவற்றிற் கெல்லாம் வேறா யிராநின்ற அறிவுருவமாய என்பால் யாதொரு தேகத்தையுங் காணேம். இது இது வென்னக் கவரப் படுவனவாய் அநித்தியங்களா யிருக்கும் ஊகத்தாலும் எனக்கு நித்தியம் நிரிந்திரியத் தன்மை யுண்மையினாலும் எப்போதும் யான் அசரீர னென வுளத்தே யோர்வாய். 21

22. நிரிந்திரியன்.

அவனவன் சாதியின் றொழிலவ ரவர்க்குறலி னனியர்சா தித்தொ ழிலது மமருசா தாரணம தாயிலது போற்றேக மதனிலே வேறு

பட்ட, வவமுறும் பொறிகள்பல் விதமேணுங் காரியத் தாகுமற்றேன்று செய்ய வழியாம லதனதன் காரியங் கைவந்து வதுவுநன வதனின் மட்டும், விவகரித் துக்கனவி ஞெடுசுழுத் தியிலின்ன விடமென்று காண லற்றே வீகின்ற விந்தியத் தயலாக வவையு மவ் வியாபார மவையு மறியு, மவிருமறி வேயுருவ மாகியிந் தியமுதித் தடங்கலவை தொழில்க டம்மை யறிதலுட னசையாம லுறுநா நிரிந்திரிய ஞகுமென வறிகு வாயே.

22. நிரிந்த்ரிய:

கதம் நிரிந்த்ரியத்வம் சேத் வக்ஷ்யே தத்ராபிப்ராயத: |
தத்தஜ்ஜாதிக்ரியாஸ்வேஷாம் ஸ்வபாவாந்நாந்யதைவ ஹி ||
இந்த்ரியாணாம் ஸ்வவிஷயஜ்ஞாநஸ்வீநவாந்யதா |
ஜாக்ரந்நாத்ருவிஹாநத்வம் ஸ்வப்நௌஸ நஹிஹாநதா ||
தத்ஸங்கோசவிகாஸாத்யவ்யாபாரஜ்ஞாததாஸ்யா |
நிரிந்த்ரியோஹம் ஸச்சித்ருக் ப்ராணஸ்வாந்தே சைவ ஹி |

வசனிக்கின்றே னெனப் பிரயோகங் காணப்படுதலின் எனக் கெங்ஙனம் நிரிந்திரியத் தன்மையாத லெனின்? கூறக் கேட்டி! அவ் வச்சாதிக் கிரியைகள் அவரவர்கட்கே யியல்பாம் மாறு யாகாவாம், அங்ஙனமே பொறிகட்கும் தத்தம் விடய வுணர்வே யுளது, வேற் றுணர்வு வேறு விதமா யுதவாதாம், அவையும் நனவின் கண்ணே விளங்குகின்றனவே யல்லாமற் கனவிலும் துயிலிலும் விளங்குவதே யில்லை, அவற்றின் சுருங்கல் விரிதல்களையும் அவற்றின் வியாபாரங்களையும் அறிந்து கொண் டிருக்கும் யான், எனக் கெங்கும் அப்பிராணத் தன்மை யுண் மையின் நிரிந்திரியன் என வெண்ணுதி. 22

23. அப்பிராணன்.

பெலமுடனே பெலமிலதாய்க் காணப் பட்டும் பேசுபசி தாகமுடன் றேற்றப் பட்டு, நலமதுடன் சீவித்தேன் மரித்தே னென்றுநாநேன வதனின்விவ கரித்து மற்றப், பலவிதமா மவத்தைகளிற் காண லாகா ப்ராணனுக்கும் வேறுயத் தொழிலைக் கண்டு, நலமில தன் றன்மயின்றிச் சாட்சி யாகு நாமசைவி லப்ராண னெனவே யோர்வாய்.

23. அப்ராண:

அப்ராணத்வம் கதம் சேத்ஸ்யாத் க்ஷுத்பிபாஸாதிரூபிண: |
ஸ்வாஸ்வக்ஷுத்பிபாஸாஜந்மநாஸாதிவிக்ரியா: |

ஜாட்யாதி வ்யாதிஸாமாத்ரா ஸம்ப்ராப்தா ந ஹி ஸாந்ததா |
அஸ்வப்நஸ்தாஸாக்ஷிணோ மே ஸம்ப்ராணத்வம் குதோ
பவேத் |

பசி தாகாதி ரூபத்தோடு கூடி யவ்வுருவமாம் எனக்கு அப்பிராணத் தன்மையானது எங்ஙனஞ் சம்பவிக்கும்? வலுமை வலுமை யில்லாமை பசி தாகம் ஜந்மம் நாசம் முதலிய விக்கிரியைகள் நனவின்கண்ணே தோற்ற மாத்திரங்களே யல்லாமல் அன்னிய அவஸ்தைகளில் விளங்குவன வாகாவாம். சாக்ஷியாயிருக்கு மெனக்கு அமநஸ் தன்மை யுண்மையின் மறைகளின் வலுவால் யான் அப்பிராணன் என அறிந்து கொள்ளுதி. 23

24. அமநசு.

ஒருமோரு கூத்தாடி பலவே ஷத்தை யுறுதலெனக் காமாதி பலவே ஷங்கொண், டாருநன வதனின்வெளிச் சகமே யாகி யயர் கனவி னுட்சகமே யாகி மற்றச், சீரிலதாஞ் சுழுத்தியினிற் காணு தேகுந் தீதான மநச் செயலைக் கண்டு கொண்டு, சேருமதற் கன்னியமாய்ச் சாட்சி யாகித் திகழ்வுறுநா மம்மநசென் றறிவாய் மைந்தா.

24. அமந:

அமநஸ்கத்வம் மே ஸ்யாத் ஸதா ஸங்கல்பரூபிண: |
ஸைகோऽபி பஹுவேஷேண நர்த்தநம் குருதே யதா |
ததா மநோ ராகாதிவேஷேண பஹிர்பாதி ஹி ஜாகரே |
ஸ்வப்நே ஜகத்ஸம்பந்தம் ரூபம் ஸ்வீகுருதே மநோ ஜவ தத் ||
ஸுஷுப்தௌ ஸ்வீக்ருதம் தத் ஸர்வம் த்யஜ்யவ்ருத்திரேகஜாத் ||
தத் த்ரிஷ்வபி ஸாக்ஷித்வாத் அமநஸ்த்வம் ஸதா மம |

எப்போதுஞ் சங்கற்ப ரூபியா யிருக்கும் எனக்கு அமநசுத் தகைமை எங்ஙனமா மெனின்? கூத்தாடி யானவன் ஒருவனா யிருந்த போதினும் பல வேடங்களால் நடம் புரிவதே போல மநமானது நனவில் இராகாதி வேடங்களால் வெளியே தோற்றுகின்றது, கனவில் உள்ளே கற்பித ஜகத் சம்பந்த ரூபத்தை மநமே யடையும், துயிலின்கண்ணே யெங்கோ சென்றொடுங்கும், இதனை யுடன்பாடாகவும் எதிர்மறையாகவும் இருந்து காணும் எனக்கு நிருமல ரூபத் தன்மை யுண்மையி

ணும் சுருதியின் ஆணையினாலும் யான் அமநசு ஆவேன் என்றெண்ணுதி. 24

25. நிருமலன்.

அறைகின்ற மலமூத்தி ரங்குப்பை சேறதிழி வாஞ்சுடலை சேரி முதலா யளவின்மல மேவுற்ற புவியோடகே லங்கல்புகை யாகின்ற புழுதி முதலா, யுறைகின்ற மலமேவு நான்குபூ தத்தினுட னுறு கோழை சளியித் தமு மொழுகின்ற மலமூத்ர முதலான மலமுற்ற வூன்முறு தூல தனுவோ, டுறுகின்ற காசபட லங்குரோத காமமுத லொழிவின்மல முற்ற சூக்க வுடலினுடன் ஞானவஞ் ஞானமல முறுசீவ னுடனைந்து தொழில்க ளாதி, நிறைகின்ற மலமுற்ற வீசற்கும் வேறாகி நீண்மலமு மற்று மிதவு நிகழ்கின்ற ஞானவா நந்தவடி வானநா நிருமலன் னென்று கோள்வாய்.

25. நிர்மல:

நிர்மலத்வம் குதஶ்சித் ஸ்யாத் ஸர்வதா மலரூபிண: |
மலமூத்ரத்வபங்கத்வதூமத்வசலஶூந்யதா ||
யதா ஹி பூதேஷு ஶரீரேஷு தேஹிநாம் மலஸ்தேஹா |
ஶ்லேஷ்மாதிர்லிங்கதேஹே ச காமாத்யா லிங்கதேஹகே ||
ஜ்ஞாநாஜ்ஞாநமலம் ஜீவே பஞ்சக்ருத்யமலம் ஶிவே |
ஶுத்தஸ்வாபாவிகஸ்வபாவாந் நிர்மலோஸ்மி ந ஸம்ஶய: ||

எப்போதும் மல ரூபியா யிருக்கும் எனக்கு எங்ஙனம் நிருமலத் தன்மை யுண்டாமெனின்? மல மூத்திரத் தகைமை, சேறுடைமை, புகை யுண்மை, சஞ்சலத் தகைமை, சூநியப் பான்மை என்பன பூதங்களில் மலினத் தன்மையாம், தேகங்கட்கும் இவ்வாறே மல மிருக்கின்றதன்றே, தூல தேகத்திற் சிலேட்டு மாதியும், இலிங்க தேகத்திற் காமாதியும், ஜீவனிடத்தில் அறிவு அறியாமை மலமும் உளவன்றே, பரமேசுர ரிடத்திலும் ஐந்தொழில்களாகிய மலமன்றே வுளது, என்பாலோ தூய இயற்கைத் தன்மை யுண்மையின் ஐயப்பாடின்றி யான் நிருமலன் ஆவேனென அறிந்து கொள்வாய். 25

26. சுத்தன்.

கோள்கின்ற சாதிவன் ணச்சிரம மதனுடன் கூறதன தன்ம தன்மங் கூடுமேத னுறுபயன் தாஞ்சோர்க்க நரகாதி குறைவிலதின்

மிச்சமான, வுள்கின்ற கோடிபவ முதரேட்க் குற்றமிக வுலகின்ற சீவருடனே யுளகிருமை யவதார மாற்சரிய முதலான வுறுதோட்க் குற்றவீச, னேள்சீவர் சங்கத்த சுத்தமுற பூதங்க ளியாவுக்கும் வேறதான யாமிவைக ளுடனுற்று நின்றிடினு மெமையசுத் தங்க ளேய் தாததாலும், விள்கின்ற விவைகணம் முடைவிவர்த் தங்க ளாய் மேவியே யுறுதலானும் விமலசித் தாகின்ற நாஞ்சுத்த னென் னவே விளங்கிட வறிந்து கொள்ளே.

26. [illegible]

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

எப்போதும் அசுத்த ரூபியா யிருக்கும் எனக்குச் சுத்தத் தன்மையானது எங்ஙனமாம்? தத் தமது வருண் தரும அதருமங்களான் உண்டாம் சுவர்க்க நரக போகங்களும், எஞ்சி நின்ற நமங்கட்காக எத்தனை கோடி கற்பங்கள் பிறந்த போதினும் முடியாத பிறப்புகளும் ஜீவனுக் கசுத்தமாம்; பரமேசுரருக்கோ கருணையினால் அவதாராதி தோஷங்கள் அசுத்தமாம், ஜீவ சங்கத்தினாலே தோஷங்களோடு கூடி வாழும் பூதங்களும் புவநங்களும், ஆனால் எனக்குப் புத்தத் தன்மை யுண்மையின் யாவற்றினின்றும் யான் சுத்தன் என நிச்சயஞ் செய்வாய். 26

27. புத்தன்.

அறைதலுற தானுயுங் கூடி நின்று மறிவற்ற கடமாதி பூதாதிக்கு, முறைதனக்கோ ரறிவிலதா யோன்றி ஞேடே யுறுதலினு லறிவெனவே தோற்று கின்ற, குறைவுறமுன் றுடல்சீவன் மாயை கட்டுங் கூறலுறம் வேருகி யவைக டம்மைக், கறையின்றிப் பிரகாசஞ் செய்தெப் போதுங் கனபோத வடிவாநாம் புத்த னுமே.

27. [illegible]

[illegible]
[illegible] ॥

மத்ஸம்பந்தாச்சிதாபாஸா வர்ஷ்மஞ்சேதநவத்ஸதா: |
ஸர்வஜ்ஞத்வாதிகஞ்சைகஸ்ய பாவயேதிதி ஸந்ததம் |

எப்போதுஞ் சட ரூபியா யிருக்கு மெனக்குப் புத்தத் தன்மையானது எங்ஙனமா மெனின்? முத்தேகங்கள், ஜீவன், மாயை, பூதாதிகள் ஜடங்களாம், எனது சம்பந்தத்திலுலே சித்தைப் போன்று தோன்றுகின்றன. இவை தனித்து நிற்பினே சைதந்யத் தன்மையே கிடையாவாம். ஏகனு யிருக்கு மெனக்குச் சர்வஞ்ஞத் தன்மை யுண்மையின் யான் புத்தனு யிருக்கின்றேன் என் றெப்போதுஞ் சிந்தித்துக் கொண்டே யிருத்தி. 27

28. சர்வஞ்ஞன்

அறிதலுட னறிதலில தாகியே மூவித வவத்தையுறு ஞேயத்தையு மறியாமை யுடனறிவ தாயிலகு சர்வபுத் யாகின்ற ஞாநத்தையு, மறியுமவ னறிவிலோ னெனவிலகு முயிர்களா யமர்ஞாதுருக்கடமையு மவர்களினி விர்த்திபிர விர்த்தியையு மதுவதற் காம்பலனு மெப்போழுதுமே, யறுதியா யினதென வவத்தைமூன் றதனினு மறிகின்ற வடிவமேநம் மளவிலா வுருவான தாலுமித் திரிபுடியை யழிவினு மில்லையாயி, னறிவரில தாலுநாஞ் சகலதிரி புடிகளையு மறிகின்ற தாலுமிவித மனைத்தென வவத்தையு மறியுநாஞ் சர்வக்ஞ னுகுமேன் றறிகுவாயே.

28. ஸர்வஜ்ஞ:

ஸர்வஜ்ஞத்வம் கதம் மே ஸ்யாத் ஸதா கிஞ்சிஜ்ஞரூபிண: |
ஜ்ஞாதாஜ்ஞாதாஸ்ச விஷயா ஜ்ஞேயா ஸ்தாநத்ரயேஷ்வபி ||
ஜ்ஞாநாஜ்ஞாநமயீ புத்திர்ஜ்ஞாநமித்யபி ஸம்மதம் |
ஜ்ஞத்வாஜ்ஞத்வயோர்ஜ்ஞாதா த்ரயஸ்யாப்யவிபர்யயே ||
தத்தத்ப்ரவ்ருத்திநிவ்ருத்திஜ்ஞாதா நாந்ய: க்வசித் த்ருவம் |
பாவயேந்நித்யமேவாஸ்ய ஸர்வஜ்ஞோஸ்மீதி நிஶ்சித: ||

எப்போதும் அற்ப அறிவை யுடைய எனக்குச் சர்வஞ்ஞத் தன்மையானது எங்ஙனம் சம்பவிக்கு மெனின்? அறியப் பெற்றனவும் அறியப் பெறுதனவும் ஆம் விடயங்கள் ஞேயங்களாம். மூன்றிடங்களிலும் அவற்றைத் தொடர்ந்து அறிதல் அறியாமை ஆந் தன்மையோ டுற்றது புத்தியாம். அதுவே ஞாந மெனநவிலவும் பெறும். அறிபவனுந் தகைமை யறியானுந் தகைமை

மயமா யிருப்பவன் ஞாதா வெனப்படுவன், இம்மூன்றையுந் திரிபுடியென வியம்புவர்; இத் திரிபுடியின் பிரவிருத்தி நிவிருத்திகளை யறிபவன் என்னினு மந்நியன் எவ னொருவனுமே யில்லையென்பது திண்ணம், அத்தகைய எனக்குப் பரமாநந்த ரூபத் தன்மை யுண்மையின் யான் சர்வஞ்ஞ னென நிச்சயஞ் செய்வாய். 28

29. பரமாநந்தன்.

தனதானி யாதிசெல் வம்பிரிய மதுவிராசாதியா னீங்கு காலை தவிராத கையுடைமை பிரியமது செலவாதி தன்னினு லொருவு காலை, யினமான புத்ராதி பிரியமவ ரனலுற்ற விலமதா னீங்கு காலை யழிதூல வுடல்பிரிய மதுபுழுதி யானீங்கி லிந்தியம் பிரிய மதுவும் பினமாம்பி ராணகண் டமதான வாக்கினைப் பெறுபோத கன்று சீவன் பிரியமது வும்ப்ராண னிறுகாலை விட்டுமேக் காலுமே பிரிய வுருவாங், கனமான வாங்மாவை யன்றியோன் றிவ்விதங் காணுத படியி னுலுங் கருதுமேக் காலுமே தானுக வுற்றநாங் கழறு பரமாநந்தனே.

29. 𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌃

𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌂 𑌕𑌥𑌂 𑌮𑍇 𑌕𑍍𑌲𑍇𑌶𑌰𑍂𑌪𑌿𑌣𑌃 ।
𑌗𑍃𑌹𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌕𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌭𑌯𑌾𑌦𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌧𑌨𑌂 𑌗𑍃𑌹𑍀 ।
𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑍇 𑌤𑌦𑍍𑌧𑌨𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌂 𑌗𑍇𑌹𑌹𑍁𑌤𑌾𑌶𑌨𑌾𑌤𑍍 ।
𑌶𑌰𑍀𑌰𑌂 𑌰𑌕𑍍𑌷𑌤𑌿 𑌤𑌥𑌾 𑌯𑌦𑍍𑌵𑌾 𑌤𑌦𑍍𑌰𑍁𑌜𑍍𑌯 𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ॥
𑌪𑍍𑌰𑌾𑌣𑌕𑌣𑍍𑌠𑌵𑍇𑌦𑌨𑌾𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍𑌯 𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌵𑌸𑌾𑌨𑌕𑌾𑌲𑍇 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌶𑍍 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌰𑌾𑌸𑍍
𑌅𑌤𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌰𑍋 𑌨𑌾𑌨𑍍𑌯𑌃 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍈𑌵 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌸𑌦𑌾 ।[𑌹𑌂
𑌸𑌂𑌹𑌸𑍍𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑌸𑌨𑍍𑌦𑍋𑌹𑌾𑌶𑍍 𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌵𑌾𑌨𑌹𑌮𑍍 ॥

கிலேச ரூபியா யிருக்கு மெனக்குப் பரமாநந்த ரூபத் தன்மை யெங்ஙனமாம், அரச பய முண்டாயின் கிருக க்ஷேத்திராதிகளை யெல்லாம் விட்டொழித்துத் தநத்தைக் கவர்ந்து கொள்வன், புத்திரன் பொருட்டாக அத் தநத்தையும் விடுவன், நெருப்புப் பிடித்த வீட்டிற் புத்திரனையும் விட்டொழித்து வெளியில் வந்து சரீரத்தைக் காப்பன், அது தூளியால் அவதிப்படும்போது பொறிகளிற் பிரிய முறுவன், பிராணனை வாங்கும்

அரச னாணை வரினோ பிராணனிற் பிரியம் வைத்துப் பொறிகளிற் பிரியம் வையான், பிராணனது முடிவு காலத்திலோ பிராணனைக் காட்டினும் அதிப் பிரியன் யானே யாவேன், என்னினும் பிரிய மாகிய வஸ்து யா தொன்றுங் கிடையாது, எல்லாப் பொருள்களி னுமே ஆன்மாத்தான் அதிகப் பிரியத்திற்கு விடயமாகும், ஆன்மாவாய எனக்குச் சம்புத் தன்மை யுண்மையின் எல்லாவற் றினும் பரமானந்த முடையவன் யா னென வுணர்ந்து கொள்.

30. சம்பு.

கனவிடயஞ் சுழுத்திசோர்க்க விடயந் தன்னிற் காண்சுகங்க டமையெதிர்த்த கரணந் தன்னிற், றனதுசுகப் பதிவிம்ப மாகத் தானே தங்குதலா லுஞ்சுழுத்தி யுபேட்சை நிட்டை, துனுகாலந் தனிலுதிக்குஞ் சுகங்க ளாங்ம சுகமான படியாற்றற் சுகம தின்றிப், பனுசுகங்கள் வரவேறு வழியி லாத படியாலும் பகர்சம்பு நாமேன் றோர்வாய்.

30. [illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஹே பிரபுவே! எப்போதும் விடயியா யிருக்கும் எனக் குச் சம்புத்தகைமை யெங்ஙனங் கூடு மெனின்? கனவின்கண் ணும், சுவர்க்கத்தும், ஈண்டுள்ள விடயங்களிலும் அநுபவிக்கப் பட்ட ஆநந்தமானதும், துயில் உபேக்ஷை காமாதி முதலிய வற் றில் உண்டாம் ஆநந்த மானதும், எனது சுகப் பிரதி பிம்பமே யென்றும், என்னை விடுத்துச் சுக காரணத் தன்மை யெங்குமே கிடையா தென்றும் எண்ணி யெனக்கெப்போதும் அசலத்தன் மை யுண்மையின் யான் சம்புவாவேன் என் றெண்ணி வாழ்வாய்.

31. அசலன்.

தூய்தற்ற கிரகமூர் தேசம்விட் டலேகின்ற தூலவுட லோக லோகஞ் சுழல்கின்ற விருதேக முடன்மண்ணை வளையமாய்ச் சூழ்ந்

தலைக் கின்ற தாகி, யெய்கின்ற வுறவின்றி யிவையிலைக் கின்றகா லிவைகளுக் கிடம தாகி யெய்துற்ற வம்பரம் பௌதிகச மட்டியோ டலையிலிவை யாவு முடலாய்த், தோய்வுற்ற மெய்யறிவு ளசைகின் ற வீசனுஞ் சொல்கின்ற வேக முடனே சுழல்கின்ற பறவையென விரைந்து திக்கினுஞ் சூழ்கின்ற நூறு கோடி, யாய்வுற்ற கற்பங்க ளோடிமிக நாடிடினு மளவைகா ணாத தாகி யங்கங்கு சாட்சியா யசைவிலா தமருநா மசலனென வறிகு வாயே.

31. அசல:

அசலத்வம் கதம் தேஹஸ்தஸ்ய சஞ்சலரூபிண: ||
ஸ்தூலஸூக்ஷ்மௌ ச தேசாதௌ சலௌ லோகாதிகேஷு ச |
பூமிஶ்சலதி தோயேந தத்தோயம் வஹ்நிநா சலம் ||
பாவகோ வாயுநா வாயு: ஸ்வாஶ்ரயாம்பரே லய: |
தத³ம்பரம் சிதாகாஶே ப்ரளயே லயம்ருச்சதி ||
ஸர்வாஹம்மாநீ ஸர்வேஶ: ஸ்வசைதந்யே சலத்யஹோ |
அநேககல்பபர்யந்தம் கத்வா தார்க்ஷ்யாபி வேகத: ||
சேதநாந்தம் தத³த்³ருஷ்ட்வா தத்தத்ஸாக்ஷிதயா ஸ்தித: |
நிர்குணத்வாச்ச சைதஸ்ய ஹ்யசலோஸ்மீதி நிஶ்சிநு ||

எப்போதுஞ் சஞ்சல ரூபியா யிருக்கு மெனக்கு அசலத் தன்மை யெங்ஙனமாம்? தேசாதிகளிற் றூலதேகம் சலிக்கின் றது, சூக்கும தேகமோ வேறு வேறு லோகாதிகளிற் சலிக்கின் றது, நீராற் பூமி சலிக்கின்றது, நீருந் தீயாற் சலிக்கின்றது, நெருப்புங் காற்றாற் சலிக்கின்றது, அவ் வாயுவும் ஆகாயத்தி லேயொடுங்கும், அவ் வாகாயமும் பிரளயத்திற் சிதாகாசத் தில் ஒடுங்குதலைக் காண்டலின், சமஷ்டியாய யாவற்றையும் யானென அபிமானிக்கும் ஈசுரரும் தற் சைதன்யத்தில் அசை வுறுவர், அநேக கற்ப பரியந்தம் மேற்கூறிய சலந வத்துக்கள் யாவுமே அதிவேகமாகப் பறவைபோற் பறந் தேகினும் சேதநத் தின் முடிவு காண முடியாமையின், அது அவ்வப் பொருட்குஞ் சாக்ஷிமாத்திரமாக விருக்கும், அத்தகைய சைதந்ய எனக்கு நிர்க்குணத் தன்மை யிருந்தலினாலே யான் அசலன் என நிச் சயிப்பாய்.

32. நிர்க்குணன்.

சத்துவமாங் குணந்தனிலீ சனையு மாக்கித் தகுமிரா சதந்தனிற் சீ வரையு மாக்கி, யத்தமோ குணத்திலுல கதையு மாக்கி யவை கட்மை விரித்தடக்கி யுகங்க டோறும், வித்தரமாய் விளையாடல் செய்து கொண்டு விளங்குபிர தாநத்திற் கதீத மாகிச், சுத்தவதிட் டாநமதா யபரிச் சிந்ந சுகவடிவா யுறுநாநிர்க் குணனென் றோர் வாய்.

32. நிர்குண꞉

நிர்குணத்வம் கத²ம் சேத்ஸ்யாத் ப்ரக்ருதிர்கு³ணரூபிணீ।
ஸத்த்வாதீ³ஶ்வரம் ஜீவாந் ரஜஸா ஸ்ருஜதி ராஜஸை꞉॥
தமஸா ச ஜக³த் நிர்விகல்பத்வாந் நிர்கு³ணோऽஸ்ம்யஹம்।

எப்போது மீண்டுக் குணங்களோடு கூடி யிருக்கு மெனக்கு நிர்க்குணத் தன்மை யெங்ஙனமா மெனின்? பிரகிருதியானது சாத்துவிக குணத்தினுலே ஈசுரரையும், இரஜோ குணங்களால் ஜீவர்களையும், தமத்தாற் சகத்தையும் உண்டாக்கு கின்றது எனக்கு நிர்விகற்பத் தன்மை யுண்மையின் யான் நிர்க்குணன் ஆகின்றேனென் றெண்ணுதி. 32

33. நிருவிகற்பன்.

ஆகுமையேழ் தத்துவமாம் விகற்பங் கட்கு மப்பாலா யவையினதிட் டாந மாகி, யேகமதா மத்துவித ஞாந மாகி யிருக்கின்ற நாந்தனிற் றன் விகற்ப மற்றே, போதுமிவை தமிற்கூடி னுலும் பற்றுப் புகனிமல படிகம் போல் விகற்ப மற்று, வேகலிலாக் கடமாதி யுறும்வெ யிற்போ லிருக்கின்ற நாநிருவி கற்ப னாகும்.

33. நிர்விகல்ப꞉

கத²ம் சே நிர்விகல்பத்வம் ஸவிகல்பஸ்வரூபிண꞉॥
ஷட்த்ரிம்ஶத்தத்த்வதோऽந்யோ ஹ்யவிநிர்விகல்பக꞉।
தேஷு தத்த்வேஷு ஸம்ப³த்³தோ⁴ ஸ்ப²டிகோ யதா²॥
நிராகாரஸ்வரூபத்வாந்நிர்விகல்போऽஸ்ம்யஹம் ஸதா³।

சவிகற்ப சொருபியா யிருக்கும் எனக்கு நிருவிகற்பத் தன்மை யெங்ஙனமா மெனின்? முப்பத்தைந்து தத்துவங்களி

னும் அயலாய் இரவியைப் போலும் நிருவிகற்பகமா யிருத்தலின் நீல முதலியவை சம்பந்திக்குங்கால் அவ்வதன்கண்ணே அது அது போலப் படிக மிருப்ப தொப்ப நிராகார சொரூபத்தன்மை யுண்மையின் யான் எப்போதும் நிருவிகற்பனே யாவேன் என அறிதி. 33

34. நிராகரன்.

ஆகுவெளி யுருவாகும் பிரம மேன்று மதற்குருவ நாமமிலே யமூர்த்த மேன்று மாமுன்பி னுட்புறமில் பிரமஞ் சாட்சி யாகு மேன்று மறிபடுதே லக்ஷி லாதி, லேகமதாம் பிரமமிதற் கனிய மாகி யிவை விளக்கு மறிவுநிரா கார மேன்று மீரிரண்டு சுருதிகளுங் கூற லானு மியல்கதிரை நாடமோ முடனே நீண்ட, சோகசிதா பாசனுக் குஞ் சித்த தென்னுந் தொடர்பால்வாள் வெட்டுமோற் கூடுங் கையிற் றொடருதல்போ லிலதேற்றுற் சுபாவ சித்துச் சொல்லுருவ ரகிதரேன வேண்டு மோவேன், சோகமிலுத் தியினு நாமே யுள்ளிற் றேற் றுபோறி வெளிப்போறியின் விடய மின்றித் தொடரவையை விளக் குமநு பவத்தினுலுந் துகளினிரா காரனு மெனவே யோர்வாய்.

34. निराकारः

निराकारस्वरूपत्वं कथं साकाररूपिणः ॥
अन्तर्बहिश्च सर्वेष्वमूर्तस्साक्षिमात्रकः ।
सूर्यप्रेक्षासम्बद्धजीवस्य चिदंशितो ह्येषः
न चेच्छिदा ह्येतत्त्वं स्वत्वसिद्ध्यति का कथा ॥
करणैर्निर्वृत्तत्वात् निराकारोऽस्म्यहं सदा ।

ஆகாரரூபியா யிருக்கு மெனக்கு நிராகார சொரூபத் தன்மையானது எங்ஙனமாம்? யான் உள்ளும் வெளியும் எவற் றினுள்ளும் அமூர்த்தனுய்ச் சாக்ஷிமாத்திரமா யுள்ளேன், சூரி யனைக்காணும் ஜீவன் சித்தம்சமா யிருத்தலின் சூரிய மண்டல பரியந்தம் நீண்ட விருத்தி சகித ஜீவனை, கை கால்களைப் போல வாள் கொண்டு வெட்ட முடியாதாம் எனின் சித்தாயிருக்கு மெனக்கு அமூர்த்தத் தன்மை யுண் டென்பதும் எக்காரணங்க ளாலும் என்னை வெட்ட முடியா தென்பதுஞ் சுயமாகவே துணி யப் பெறு மெனக் கூறவும் வேண்டுமோ அத்தகைய எனக்குக் கரண வியாபாரம் யாவும் விடுபட்டு நித்திய முக்தத் தன்மை

யுண்மையின் யா னெப்போதும் நிராகாரனே யாவேன் என்றெண்ணுதி. 34

35. நித்திய முக்தன்.

அயர்கருத் தாவாயு மேபுசிப் பவனுயு மநுதிநமு மமர்த லாலே யதங்மமோடு தங்மமத ஞனிதம் பெத்தனே யன்றி யொருகாலு முத்த, னயமாக வலனென்று கங்மகாண் டத்தினி னண்ணுமாங் மாவி தென்றே நாடபிர மாதாவி னுக்குமஞ் ஞாநத்தி னவின் மலங் கங்ம மதனு, லுயருதலில் பெத்தனு யுறுவன்ஞா நத்தினி லுயர்முத்த னுவ னென்றே யுபாசனு காண்டத்தி லாங்மாவி தென்றுதா னுரைத்திடுஞ் சீவ னுக்கு, மயலாகி நிருவிகா ரவ்வறிவ தாமெமக் காகுபேங் தத்தோ டக்கு மணுகலோரு காலத்து மில்லாத படியினு லமர்நித்ய முத்த னுமே.

35. 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍁𑌕𑍍𑌤𑌃

𑌕𑌥𑌂 𑌮𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍁𑌕𑍍𑌤𑌤𑍍𑌵𑌂 𑌸𑌦𑌾 𑌬𑌦𑍍𑌧𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌿𑌣𑌃 ॥
𑌕𑌰𑍍𑌮𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑌬𑌦𑍍𑌧𑌃 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌜𑍀𑌵𑍋 𑌨 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌭𑌾𑌕𑍍 ।
𑌭𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑌬𑌦𑍍𑌧𑍋𑌽𑌪𑍀𑌶𑌾𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌭𑌵𑌤𑍍𑌯𑌯𑌂 ॥
𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 𑌯𑌥𑌾 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌧𑌤𑌾 𑌰𑌾𑌜𑌪𑍁𑌤𑍍𑌰𑌕𑍇 ।
𑌰𑌾𑌜𑍇𑌤𑌿 𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌤𑍍𑌸𑌦𑍍𑌯𑍋 𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌧𑌤𑌾 𑌯𑌥𑌾 ॥
𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌜𑍍 𑌜𑍀𑌵𑌵𑌦𑍍 𑌭𑌾𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿 𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌦𑌯𑌂 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌨𑌾𑌦𑌿 𑌮𑍁𑌕𑍍𑌤𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸 𑌏𑌵 𑌹𑌿 ॥

எப்போதும் பந்த ரூபியா யிருக்கு மெனக்கு நித்திய முக்தத் தன்மையானது எங்ஙனம் பலிக்கு மெனின்? கருமகாண்டத்தில் நித்தங் கட்டுப்பட்டவன் கருத்தா ஜீவன் என முக்தியை யடைய அவன் கூடாதவனேயாவன், பக்தி காண்டத்தில் நித்தியபத்தனுகி யிருந்த போதினும் ஈசன் றிருவருளால் இச்சீவன் முக்தனுதல் கூடும், ஞாந காண்டத்தில் அவ்வா றின்றும் மற்றெவ்வா றெனின், வேடத்தன்மையை யடைந்த மன்னவன் மகனுக்கு நீ அரசகுமரன் என வேடனேதுஞ் சிரவணத்தைக் கேட்டு உடனே வேடத் தன்மையானது ஏகிவிடல் போல அஞ்ஞாநத்தினுலே ஜீவனைப் போல இலங்குபவன் நீ பிரஹ்ம சொரூப மென்னும் உபதேசமாகிப சிரவணத்தால் தானே பிரஹ்ம

சொரூபமா யிலங்குபவன், ஆகலின் எனக்கு அநாதி முக்தத் தன்மை யுண்மையின் யான் நித்திய முக்தனே யென எண்ணி வாழ்வாய். 35

36. அநாதி முக்தன்.

ஆமயர்வின் மூவர்முதற் றேவர் சாலோ காதியெனக் கற்பிதமா யழியு முத்திக், கேம முறப் புறம்பாகச் சித்தித் தென்று மெள்ளள வுங் கிரகிக்க விடக்கூ டாதாய்த், தோமறுசற் சிற்சுகமே வடிவாந் தம்மைச் சுருதியினு லுணர்கின்ற தநாதி முத்தி, யாமதனு லேழை ந்தின் மேலா நாமே யநாதிமுத்த னெனவகத்தி னறிய வேண்டும்.

36. 𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃

𑌕𑌥𑌂 𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑌤𑍍𑌵𑌂 𑌬𑌦𑍍𑌧𑌵𑌰𑍍𑌷𑍍𑌮𑌣𑌃 ।
𑌤𑍍𑌰𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌪𑌦𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑍇𑌯𑌂 𑌯𑌤𑍋 𑌨 𑌹𑌿 ॥
𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌾𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌵𑌿𑌹𑍀𑌨𑌾 𑌚 𑌸𑌚𑍍𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌰𑍂𑌪𑌿𑌣𑍀 ।
𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌨𑌾𑌦𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌃 𑌷𑌟𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌪𑌾𑌰𑌗𑌾 ।
𑌅𑌚𑍍𑌯𑍁𑌤𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌨𑌾𑌦𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌤𑍍𑌵𑌂 𑌨 𑌹𑌿 𑌸𑌂𑌶𑌯𑌃 ।

முன்னர்ப் பத்த சொரூபியாயிருக்கு மெனக்கு அநாதிமுக் தத் தன்மையானது எங்ஙனம் எனின்?

மும்மூர்த்தியாதிபதப் பிராப்தியானது கற்பிதமாம், இஃ தங்ஙன மன்றும், தள்ளத் தகாததும் கொள்ளத் தகாததும் ஆகிய சச்சிதாநந்த ரூபத்தின்கண்ணே அநாதி முக்தியானது சுருதியால் அறியத் தக்கதாம், அது முப்பத்தைந்து தத்துவங் கட்கும் அப்பாற்பட்டதாம், அத்தகையதாய எனக்கு அச்சுதத் தன்மை யுண்மையின் எப்போதும் யான் அநாதி முக்த னென வைய மின்றி யறிந்து கொள்வாய். 36

37. அச்சுதன்.

நழுவல்சுத நழுவாதச் சுதம தாகு நாடுமொரு நூறுண்டின் மேலி ராம, னழுவுகின்ற தூலவுடல் பிரள யத்தி னழுவு லிங்க வுடல்பூத ஞாநந் தன்னி, னழுவவித்தை மாயைபரன் சீவ னுகை நவிலுமையே முக்கயலாய்ச் சுகசிற் சத்தாய், நழுவலிலா தேக்கா லுந் தானே யாக நண்ணிவிளக் கிடுதலினச் சுதனு மாகும்.

37. 𑌅𑌚𑍍𑌯𑍁𑌤𑌃

𑌅𑌚𑍍𑌯𑍁𑌤𑌤𑍍𑌵𑌂 𑌕𑌥𑌂 𑌦𑍇𑌹𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌥𑍂𑌲𑌤𑌶𑍍𑌚𑍍𑌯𑍁𑌤𑌰𑍂𑌪𑌿𑌣𑌃 ।
𑌸𑌦𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑍁𑌦𑌯𑌨𑌾𑌶𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌾𑌶𑌨𑌂 ॥

ஜ்ஞாநாதவித்யாமாயா ச ஜீவேஶௌ ச விநஶ்யத: |
பஞ்சத்ரிம்ஶத்தத்வாதீதத்வாச்ச க்ஷேத்ரஜ்ஞத்வாச்ச த்வம்ச்யுத: ||

எப்போதும் நழுவும் வடிவினனுய எனக்கு அச்சுதத் தன்மையானது எங்ஙனமா மெனின்? நூறு வயது சென்றால் தூல சரீரம் நாசமாம், பிரளயத்தில் இலிங்கசரீரம் நாசமாம், ஞானத்தினலோ அவித்தையும் மாயையும் ஜீவனும் ஈசுரரும் மறைவுறும், என்பதனுனும் முப்பத்தைந்து தத்துவங்கட்கு மேலாயிருப்பதனுனும் க்ஷேத்திரஞ்ஞத்தன்மை யுண்மையினுனும் நீ அச்சுதனேயாவாய். 37

38. க்ஷேத்ரஞ்ஞன்.

மூலவஞ் ஞானகா ரியமதா யமர்கின்ற மூன்றுதனு வுஞ்சேத்திர முன்னுமிதை யறிபவன் சேத்ரக்ஞ னுகுநீ மொழியர்த்த மறியேனெனல், சீலமில பாவவுரு வஞ்ஞாந மிதுபரம சித்திலா ரோபமாகித் திகழுநா தியதேனச் சொல்வதா நானேனச் சேத்திரந் தன்னினுற்ற, வாலம்ப மில்லறிவ நாதியா யுறுவத்தி யாசமாம் பூர்வ தேகவாங்மவநு பவமாம்பி ராந்திமேல் வருதேக வாங்மப்பி ராந்திகட்கு, மூலமிது பிராந்திமூ லப்பிரமை யறிவின்மை மொழிசேத்ரமத்தியா சமூ மோகமேன நீக்கியவ திட்டாந மாயறியு முரணினுஞ் சேத்தி ரக்ஞன்.

38. க்ஷேத்ரஜ்ஞ:

க்ஷேத்ரஜ்ஞத்வம் கதம் மே ஸ்யாத்ஸதா க்ஷேத்ரஸ்வரூபிண: |
ஶரீரத்ரயம் க்ஷேத்ரமுஜ்ஜ்ஞாநவாந் ஜ்ஞாயகஸ்தத: ||
க்ஷேத்ரஜ்ஞ ஶ்ருத்யாஹுர்ஜ்ஞாநதோ ஜ்ஞாதா பவதி ஜீவக:|
ஸ்வப்நவாய்யம் மஜ்ஜ்ஞாநாதிதி த்ரிவம் ஜ்ஞாத்வாபி ஸந்ததி||
க்ஷேத்ராத்யாஸோநாதிரத: ஸதா பஞ்சதேஹாபிமாநத:|
ஸ்தூலஶரீரம் ஸம்ப்ராப்ய தேதஸ்த்வாதி தேஹகா: ||
வ்ருக்ஷவீஜவதேவ ப்ராணம் ப்ராப்ய ஸம்ஸ்தா ஜந்மகர்மண:|
பயத்ராயாஸ் ஹ்ராஸ்ப்ரப்ராஸ: ஸ்வநாமேவ ஜந்ததி ||
ஸாஜ்யேநா தோஷ்வாஸ்த்வாதேவ க்ஷேத்ரஜ்ஞாஹம் நஸம்ஶய: |

எப்போதும் க்ஷேத்திர சொரூபியா யிருக்கும் எனக்கு க்ஷேத்திரஞ்ஞத் தன்மையானது எங்ஙன மென்னில்? மூல

